

கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 77 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 09 – வியாழக்கிழமை 26 அக்டோபர் 2023 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 77 : Thiruvalluvar Year - 2054 - Ayppasi 09 - Thursday 26 October 2023 - Dak 16 Pages ₹ 5.00


## 16 லட்சம் பேர் பயன்பெறுவர்! 42 சதவிகிதத்திலிருந்து 46 சதவிகிதமாக

# அரசு அலுவலர் - ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக். 26-**

**அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்படும் 42 சதவீத அகவிலைப்படி, 01.07.2023 முதல் 46 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

மக்கள் நலனுக்காக அரசு வகுக்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் அரும்பணியில், அரசோடு இணைந்து பணியாற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை இந்த அரசு தொடர்ந்து பாதுகாத்து வருகின்றது. முந்தைய அரசு விட்டுச் சென்ற கடும் நிதி நெருக்கடி மற்றும் கடன் சுமைக்கு இடையேயும், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்த வாக்குறுதிகளைப் படிப்படியாக நிறைவேற்ற முனைப்புடன் இந்த அரசு செயல்பட்டு வருகின்றது.

அவ்வகையில், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கையை முதலமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து, ஒன்றிய அரசு பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வை அறிவிக்கும் போதெல்லாம் உடனுக்குடன் தமிழ்நாடு அரசும் அதை பின்பற்றி அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர்களுக்கும் அகவிலைப்படி உயர்வை செயல்படுத்தப்படும் என்று ஏற்கனவே வெளியிட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, தற்போது 42 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 01.07.2023 முதல் 46 சதவீதமாக உயர்த்தி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு 2546.16 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். எனினும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.10.2023) தலைமைச் செயலகத்தில், நீர்வளத் துறையின் திட்ட உருவாக்கப் பிரிவின் உதவி செயற் பொறியாளர்களின் பயன்பாட்டிற்காக 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் 41 ஈப்புகளை வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ரூ.3.70 கோடி மதிப்பில்

# நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர்களுக்கு புதிய வாகனங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, அக். 26-**

**நீர்வளத்துறை சார்பில் உதவி செயற் பொறியாளர்களின் பயன்பாட்டிற்காக ரூ.3.70 கோடி மதிப்பில் 41 ஈப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.10.2023) தலைமைச் செயலகத்தில், நீர்வளத் துறையின் திட்ட உருவாக்கப் பிரிவின் உதவி செயற் பொறியாளர்களின் பயன்பாட்டிற்காக 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் 41 ஈப்புகளை வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நீர் ஆதாரங்களை சிறந்த முறையில் மேம்படுத்தி விவசாயம், குடிநீர் மற்றும் தொழிற்சாலைகள் போன்ற பல்வேறு துறைகளின் நீர் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு புதிய கட்டமைப்புகளை உருவாக்குதல், ஏற்கெனவே உள்ள நீர்நிலைகள் மற்றும் அதன் உட்கட்டமைப்புகளை நல்ல முறையில் பராமரித்தல், பாசன கட்டமைப்புகளான அணைகள், அணைக்கட்டுகள், நிலத்தடி தடுப்புசுவர்கள், கால்வாய்கள், வாய்க்கால்கள், ஏரிகள் போன்றவற்றை உருவாக்குதல், புனரமைத்தல் மற்றும் பராமரித்தல் போன்ற பல்வேறு முக்கியப் பணிகளை நீர்வளத்துறை மேற்கொண்டு வருகிறது.

நீர்வளத்துறையின் திட்ட உருவாக்கப் பிரிவின் கீழ் உள்ள அனைத்து உபகோட்டங்களில் பணிபுரியும் அனைத்து உதவி செயற்பொறியாளர்களுக்கும் பழைய வாகனங்களுக்கு மாற்றாக புதியதாக ஈப்பு வாகனங்களை வழங்கிடும் விதமாக, 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்ட 41 ஈப்புகளை நீர்வளத் துறையின் திட்ட உருவாக்கப் பிரிவின் உதவி செயற் பொறியாளர்களின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் வகையில் அவ்வாகனங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்து, வாகனங்களுக்கான சாவிகளை உதவி செயற் பொறியாளர்களுக்கு வழங்கினார்.

இதனால் திட்ட உருவாக்க பிரிவில் பணிபுரியும் பொறியாளர்கள், நிலமேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் ஆதாரங்களைப் பெருக்க தொலைதூர மற்றும் மலைப்பாங்கான இடங்களில் பல புதிய திட்டங்களை ஆய்வு செய்து உருவாக்க இந்த ஈப்புகள் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, நீர்வளத் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் (பொறுப்பு) கு. அசோகன், நீர்வளத்துறை திட்ட உருவாக்கப் பிரிவின் தலைமைப் பொறியாளர் க.பொன்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


# வங்கதேசம் அருகே கரையை கடந்தது 'ஹமூன்' புயல்!

## வானிலை ஆய்வு மையம் தகவல்!

*சென்னை, அக். 26 -*

ஹமூன் புயல் வங்கதேசம் அருகே கரையை கடந்ததாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு வங்கக் கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறியது. இந்த புயலானது நேற்று முன்தினம் அதிதீவிர புயலாக மாறி பின்னர் மிகத் தீவிர புயலாக மாறியது.



இந்த புயலானது ஆழமான காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி வங்க தேசத்தில் கெபுரா சிட்டகாங் இடையே கரையை கடக்க வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் தீவிர புயலாக இருந்த 'ஹமூன்' புயலாக வலுவிழந்து வங்க தேசம் அருகே நேற்று கரையை கடந்தது.

இது அடுத்த 6 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## சுதந்திரப் போராட்ட வீரர்களை உண்மையிலேயே மதிப்பவராக இருந்தால்

# முதுபெரும் தலைவர் சங்கரய்யாவுக்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்க ஆளுநர் ஒப்புதல் தராதது ஏன்?

## அமைச்சர் க.பொன்முடி கேள்வி!

*சென்னை, அக். 26 -*

தமிழ்நாட்டைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் மீது உண்மையிலேயே ஆளுநருக்கு அக்கறை இருந்தால், கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் சங்கரய்யாவுக்கு டாக்டர் பட்டம் வழங்க ஒப்புதல் அளிக்க வேண்டும் என உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், சில தினங்களுக்கு முன்பு மருது சகோதரர்கள் நிகழ்ச்சியில் பேசிய ஆளுநர் ஆர்.என்.ரவி, சுதந்திர போராட்ட வீரர்களை தமிழக அரசு மறந்துவிட்டதாகக் குற்றம்சாட்டி பேசினார்.

இந்த நிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார்.



அப்போது அவர், "தமிழகத்தின் சுதந்திரப் போராட்ட வீரர்களை தி.மு.க. நினைவுகூர தவறியதாக, தமிழகத்தின் சுதந்திர போராட்ட வரலாறு அனைத்தும் தெரிந்தவர்போல, ஆளுநர் ஆர்.என். ரவி கருத்து கூறியிருக்கிறார். அதற்கான பதிலை, தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு நேற்றே தெரிவித்துள்ளார்.

தமிழக சுதந்திரப் போராட்ட வீரர்கள் மேல் அக்கறை உள்ளவர் போல பேசுகிற தமிழக ஆளுநர், ஊடகங்கள் வழியாக நான் அளிக்கும் பேட்டியை நிச்சயமாக கேட்பார் என்று கருதுகிறேன். ஆளுநருக்கு உண்மையிலேயே தமிழகத்தைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் மீது அக்கறை இருக்குமானால் மதுரை பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழு மற்றும் ஆட்சிமன்ற பேரவைக்குழு இரண்டும் சேர்ந்து, ஆட்சிக்குழுவின் மூலமாக 18.8. 2023 அன்றும், ஆட்சிமன்ற பேரவைக்குழுவில் 20.9.2023 லும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு ஒரு பரிந்துரை அனுப்பி வைக்கப்பட்டது.

அது அந்த பல்கலைக்கழகத்தின் சட்ட விதியின்படி, ஆட்சிமன்ற பேரவைக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், கவுரவ டாக்டர் பட்டம் வழங்க வேண்டும். ஆனால், அதற்கு வேந்தரின் கையெழுத்தும் தேவை என சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்கரய்யா மிகச்சிறந்த சுதந்திர போராட்ட வீரர். கல்லூரி படிப்பையே இழந்து 9 ஆண்டுகள் சிறையில் வாடி இருக்கிறார். அதோடு இரண்டு ஆண்டுகள் தலைமறைவாக இருந்து போராடியவர். அவருடைய வரலாற்றை பார்த்து தெரிந்து கொண்டாவது ஆளுநர், இதில் கையெழுத்திட வேண்டும்" எனத் தெரிவித்திருக்கிறார்.



இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 26-10-2023

# மருது சகோதரர்களைப் பேச மன்னிப்பு சகோதரர்க்கு அருகதை உண்டா?

**பல ஆண்டு காலம் அதிகாரப் பதவியை அனுபவித்துவிட்டு - இப்போது சொகுசான வாழ்க்கையை அடைந்திருக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு இப்போதுதான் மருதுபாண்டியர் கண்ணுக்குத் தெரியவந்துள்ளார்.**

**'என்னது சிவாஜி செத்துட்டாரா?' என்று கேட்பதைப் போல, 'மருதுபாண்டியரை மறைத்துவிட்டார்கள்' என்று கிளம்பி இருக்கிறார். பூனை கண்ணை மூடிக் கொண்டதால் உலகம் இருண்டு விடாது. இது மருதுபாண்டியர் பூமி என்பதை நினைவூட்டிக் கொண்டே இருக்கும் திராவிட பூமி இது.**

இவர்களுக்கு இப்போது மருதுபாண்டியரைப் பற்றிப் பேச வேண்டிய அவசியம் என்ன வந்தது? அவரைப் பேசுவதால் ஏதாவது ஓட்டு சிந்தாதா என்ற நப்பாசை தான். பா.ஜ.க.வுக்கு இருந்த ஒன்றரையணா ஓட்டையும் வந்து குறைத்ததில் அரைப்பங்கு அண்ணாமலைக்கு உண்டு. அரைப் பங்கு ஆர்.என்.ரவிக்கு உண்டு. மற்றபடி இவர்களால் பா.ஜ.க. ஒரு சென்டி மீட்டர் கூட உயரவில்லை.

ஏதோ ஒரு தனியார் பயிற்சி நிறுவனத்துக்குப் போய் தனது அரைகுறை அறிவைக் காட்டிக் கொண்டு இருக்கிறார் ஆளுநர். அந்த வரிசையில் திருச்சியில் நடந்த நிகழ்ச்சியில், "இரண்டாண்டுகளுக்கு முன் நான் தமிழ்நாட்டிற்கு வந்தபோது தமிழ்நாடு அரசிடம் நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களின் பெயர் பட்டியலை கேட்டிருந்தேன். அவர்கள் 40க்கும் குறைவானப் பெயர்களை மட்டும்தான் எனக்குத் தந்தார்கள். பின்னர் தேடி படித்ததில் பல்லாயிரக்கணக்கான வீரர்கள் தமிழ்நாட்டில் பிறந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடி இருப்பது தெரியவந்தது. தமிழ்நாட்டில் பிறந்த சுதந்திரப் போராட்ட வீரர்கள் மறக்கடிக்கப்பட வேண்டும் என்றே இங்கு ஆட்சி செய்தவர்கள் திட்டமிட்டு அதை செய்தார்கள். அவர்கள் தமிழ்நாட்டில் கொண்டாடப்படவில்லை, பாடப் புத்தகங்களில் அவர்கள் வரலாறு அழிக்கப்பட்டது. சுதந்திரப் போராட்டத் தியாகிகள் எந்த சமூகத்தில் இருந்து வந்தார்கள் என்பதிலிருந்து அவர்களை ஜாதி தலைவர்களாக அடையாளப்படுத்தி, மக்களை ஒன்றுபட விடாமல் தடுக்கிறார்கள். சுதந்திரப் போராட்ட வீரர்களை கொண்டாடுவதில்லை. நாம் கடந்த கால வரலாறுகளை நினைவு கூர்வது அவசியம். தமிழ்நாட்டில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் குறித்து ஆராய்ச்சி மாணவர்கள் யாரும் ஆய்வு செய்வதில்லை. அது எனக்கு வருத்தமாக உள்ளது. வருங்கால தலைமுறையினர் சுதந்திரப் போராட்ட வீரர்கள் குறித்து முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும்" என்று பேசி இருக்கிறார் ஆர்.என்.ரவி.

அவரது பேச்சைப் படிக்கும்போது புல்லரிக்கிறது. சுதந்திரத்துக்காகவே பிறப்பெடுத்த தலைமுறையைப் போல பேசி இருக்கிறார் அவர்.

**கோட்சேக்களை குருமார்களாகக் கொண்ட கூட்டம், இந்திய விடுதலை வீரர்களைப் போற்றுவதைப் பார்த்தால் சிரிப்பாக இருக்கிறது. 'மன்னிப்பு'க் கடித சாவர்க்கரை துதிபாடும் கூட்டம் இந்திய விடுதலைப் போராட்டம் பற்றி பேசுவதைக் கேட்டால் புல்லரிக்கிறது. இந்தியாவின் புகழ்பெற்ற வழக்கறிஞரான ஏ.ஜி.நூரணி அவர்கள், 'சாவர்க்கரும் இந்துத்துவமும் - மகாத்மா காந்தி படுகொலையும்' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதினார். ஆவணக் காப்பகத்தின் பல்வேறு தகவல்களைத் திரட்டி எழுதப்பட்ட வரலாற்று ஆய்வு நூலாகும் அது. பல முறை ஆங்கில அரசிடம் மன்னிப்புக் கேட்டவர் சாவர்க்கர் என்பதை ஆதாரங்களுடன் அந்த நூலில் ஏ.ஜி.நூரணி சொல்லி இருக்கிறார்.**

1883 முதல் 1966 வரை வாழ்ந்தவர் சாவர்க்கர். இந்தியாவிலும் இலண்டனிலும் மன்னராட்சிக்கு எதிராகப் பேசியதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு 1910 ஜூலை 22 அன்று மும்பைக்கு அழைத்து வரப்பட்டார் சாவர்க்கர். டிசம்பர் 10 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் படி ஆயுள் காலம் முழுவதும் நாடுகடத்தப்பட்டு சிறை வைக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு தரப்படுகிறது. அதன்படி அந்தமான் சிறையில் அடைக்கப் படுகிறார். 1911 ஆங்கில அரசுக்கு அவர் ஒரு கருணை மனு அனுப்புகிறார். அதன்மீது நடவடிக்கை இல்லை என்றதும் 1913 நவம்பர் 14 அன்று மீண்டும் கருணை மனு போடுகிறார். அந்த வாசகங்களை வழக்கறிஞர் ஏ.ஜி.நூரணி தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**"அரசு தன் நல்லதிகாரத்தைப் பயன்படுத்தி என்னை விடுவித்தால் அரசியலமைப்பின் செயல்பாட்டிற்காக வாதாடுவதுடன் ஆங்கில அரசுக்கு விசுவாசமாகவும் நடந்து கொள்வேன். அரசு எந்த வகையில் விரும்புகிறதோ அந்த வகையில் சேவகம் புரியத் தயாராக உள்ளேன். எனது மாற்றம் மனசாட்சியின் குரலுக்கேற்ப ஏற்பட்டுள்ளதால் எனது எதிர்கால நடத்தை அதற்கேற்பத்தான் இருக்கும். என்னைச் சிறையில் வைத்திருப்பதன் மூலம் எதுவும் பெற இயலாது. மாறாக அவ்வாறு இல்லாதிருப்பதை ஒப்பிட்டுப் பார்க்கலாம். தந்தை போன்ற அரசின் வாசலுக்குக் கெட்டழிந்த மகன் திரும்ப வருமாறு கருணை செய்ய வல்லமை மிக்க தங்களால்மட்டுமே முடியும்"- என்று சாவர்க்கர் எழுதி இருக்கிறார். மன்னிப்பு, கருணை மனுவை விட மிக மோசமான வார்த்தைகள் இவை என்கிறார் வழக்கறிஞர் ஏ.ஜி.நூரணி.**

1924 எரவாடா சிறையில் இருந்து நிபந்தனைகள் அடிப்படையில் விடுதலை செய்யப்படுகிறார் சாவர்க்கர். அடுத்த ஆண்டு ஒரு கட்டுரை எழுதியதற்காக மீண்டும் அவர் மீது வழக்குப் பாய்கிறது. அதற்கு அனுப்பிய பதிலில் சுயராஜ்யம் என்ற சொல்லில் தனக்கு நம்பிக்கை இல்லை என்று பதில் அனுப்பி இருக்கிறார் சாவர்க்கர். அவருக்கு மீண்டும் பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்படுகிறது. 1937 ஆம் ஆண்டு தான் முழுமையாக விடுவிக்கப்படுகிறார். இவை அனைத்தையும் வரிசைப்படுத்தி இருக்கிறார் ஏ.ஜி.நூரணி.

**"சாவர்க்கரின் கஷ்டங்களைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. அதேபோல், அவரது சரணாகதியையும் சமரசப் போக்கையும் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. அவரை வீரராகப் புகழ்பவர்கள், அவரது முதல் பகுதியை மட்டும் மிகைப்படுத்திக் கூறிவிட்டு பிற்பகுதியைப் பற்றி அவர்களால் மறுக்க முடியாவிட்டாலும் கண்டுகொள்வதில்லை" என்று எழுதி இருக்கிறார் நூரணி.**

இத்தகைய மன்னிப்பு சகோதரர்க்கு மருது சகோதரர்களைப் பற்றிப் பேச அருகதை உண்டா?

(குறிப்பு: தி.மு.க.வும் விடுதலைப் போராட்ட வீரர்களும் - என்ற தலைப்பிலான தலையங்கம் நாளை!)



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2023) சென்னையில் நடைபெற்ற வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களின் மகள் டாக்டர் எம்.ஆர்.கே.பி.கண்மணி – டாக்டர் கே. சித்தார்த் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் உள்ளிட்ட கட்சி தலைவர்கள், மக்கள் நீதி மையத்தின் தலைவர் கமல்ஹாசன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### இந்தியாவில் எந்தக் கட்சியும் செய்யாத அளவுக்கு

# கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி வருவது தி.மு.க.!

## தேனியில் கழக இளைஞரணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**தேனி, அக்.26-**

**இந்தியாவில் எந்தக் கட்சியும் செய்யாத அளவுக்கு தி.மு.க.வின் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கப்பட்டு வருவதாக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**



தேனி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக தி.மு.க. இளைஞரணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேனி சென்றுள்ளார். அதன் ஒரு பகுதியாக கம்பம் தனியார் அரங்கில் தி.மு.க. மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கினார்.

அப்போது ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி மற்றும் தேனி மாவட்ட நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தி.மு.க. மூத்த முன்னோடிகளிடம் வாழ்த்துப் பெறவே தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளதாகவும், இதுவரை எந்தக் கட்சியும் செய்யாத அளவிற்கு தி.மு.க. இளைஞரணி சார்பில் 40 கோடி ரூபாய் அளவில் பொற்கிழி வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

**கர்னல் ஜான் பென்னி குவிக்கிற்கு மரியாதை!**

இதனிடையே, முல்லைப்பெரியாறு அணையைக் கட்டி தேனி, மதுரை உள்ளிட்ட ஐந்து மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்த கர்னல் ஜான் பென்னி குவிக்கிற்கு தேனி லோயர்கேம்பில் அமைக்கப்பட்டுள்ள நினைவு மண்டபத்தில், அவருடைய திருவுருவச்சிலைக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்

அப்போது ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் இ.பெரியசாமி, மாவட்ட ஆட்சியர் சஜீவனா, சட்டமன்ற உறுப்பினர்கள் கம்பம் ராமகிருஷ்ணன், மகாராஜன், சரவணக்குமார், தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

முன்னதாக, கம்பம் அருகேயுள்ள ஆதிசஞ்சனசேரி தனியார் பெண்கள் கல்லூரி மாணவிகள் சாலையில் இருபுறம் நின்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது, புதுமைப் பெண் திட்டத்திற்கும், இலவச பேருந்துப் பயண திட்டத்திற்கும் நன்றி தெரிவிக்கும் விதமான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி, அமைச்சருக்கு நன்றி தெரிவித்தனர்.

## வில்லிவாக்கத்தில் மருத்துவ முகாம்!

*சென்னை, அக். 26 -*

*சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு "உடல் குணமாகட்டும்! உயிர் நலமாகட்டும்! " வில்லிவாக்கம் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான மருத்துவ முகாம்கள் 27.10.20223, 28.10.2023, 29.10.2023 வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமை ஆகிய மூன்று நாட்கள் தொடர்ந்து மாபெரும் மருத்துவ முகாம் நடைபெறுகிறது.*

*முதல் நாள் மருத்துவ முகாம் (27.10.2023 வெள்ளிக்கிழமை) காலை 9 மணியளவில், வில்லிவாக்கம், எம்.டி.எச்.சாலையில் அமைந்துள்ள டி.கே.ஏ.திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.*

*இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகிக்கிறார்.*

*இந்நிகழ்ச்சியில் வனத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு முகாமினை துவக்கி வைக்கின்றார்.*

*மத்தியசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், வில்லிவாக்கம் கிழக்கு பகுதிச் செயலாளர் வே.வாசு, சாவித்திரி ஸ்ரீவீரராகவன், டி.வி.செம்மொழி எம்.சி, சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், லதா வாசு எம்.சி, ஆர்.வரதன், ஜி.ஜெ. பிரபு, எம்.சுரேஷ், ஜெ.எஸ். பிரபு, வி.து.ராமமூர்த்தி, பா. இளையா, மு.கலைச்செல்வி, ஐ.சி.எப்.சுரேஷ்பாபு, சிட்கோ சேகர், க.சுகுமாரன், மா.அகிலன், பா. ஜானி, சொ.முருகேசன், ப. லோகுபாபு, ஜெ.தங்கராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இதில் கழக முன்னணியினர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.10.2023) தலைமைச் செயலகத்தில், நீர்வளத் துறையின் திட்ட உருவாக்கப் பிரிவின் உதவி செயற் பொறியாளர்களின் பயன்பாட்டிற்காக 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் 41 ஈப்புகளை வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்து, வாகனங்களுக்கான சாவிகளை உதவி செயற் பொறியாளர்களுக்கு வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை மெட்ரோ ரெயிலில் பாதுகாப்பு அலாரங்கள்!

சென்னை, அக். 26 -

சென்னையில் ஓடும் ஒவ்வொரு மெட்ரோ ரெயிலிலும் 4 அலாரங்கள் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த அலாரத்தின் பொத்தானை அழுத்தினால் பெண்களுக்கு உடனடி உதவிகள் கிடைக்கும். கண்ட்ரோல் ரூம் மற்றும் டிரைவரின் கட்டுப்பாட்டு அறைக்கு இதன் மூலம் பேச முடியும்.

மெட்ரோ ரெயிலில் பெண் பயணிகளுக்கு ஏற்படும் இடையூறுகள், அசம்பாவிதம், பாலியல் தொந்தரவு குறித்து இதில் புகார் செய்யலாம். உடனடியாக சி.சி.டி.வி. கேமரா மூலம் ஆய்வுசெய்து சம்பந்தப்பட்ட நபர்கள் உடனடியாக கைது செய்யப்படுகிறார்கள்.

கடந்த 4 மாதத்தில் இது வரை 12 ஆயிரம் பெண்கள் இந்த அவசர அலார பொத்தானை அழுத்தி புகார் செய்து பயன்பெற்று உள்ளனர். இதில் உள்ள "விரைவு பதிலளிப்பு குழுக்கள்' பெண்களுக்கு ஏற்படும் அசம்பாவித சம்பவங்களை உரிய நேரத்தில் தடுத்து பெண்களுக்கு தக்க பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்றன.

# மோடியோடு மேடையில் ஏற மாட்டேன் மிரண்டோடும் மிசோராம் முதல் அமைச்சர்!

**தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) யின் ஒரு அங்கமாக இருக்கும் மிசோ தேசிய முன்னணியின் தலைவரும், தற்போதைய முதல் அமைச்சருமான சோரம் தங்கா, வரும் நவம்பர் 7 அன்று நடைபெற இருக்கும் சட்டமன்றத் தேர்தலில் தங்கள் கட்சி பி.ஜே.பி.யோடு இணைந்து செயல்படாது என அறிவித்துள்ளார்.**

**பக்கத்து மாநிலமான மணிப்பூரில் பா.ஜ.க. ஆளுகின்றது. அங்கே கிறிஸ்துவ தேவாலயங்கள் தாக்கப்படுவதாகவும், இதனால் பி.ஜே.பி.யோடு இணைந்து தேர்தலை சந்திப்பதற்கு ஏற்ற சூழ்நிலை அமையவில்லை என்று அவர் 'டைம்ஸ் ஆப் இந்தியா' செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.**

**மிசோராம் மக்கள் கிறிஸ்துவர்களாக இருப்பதால், பி.ஜே.பி.யோடு இணைந்து செயல்பட்டால் அது எதிர்மறை விளைவுகளையே உருவாக்கும். மேலும் மோடி மிசோராமுக்கு வரும் அக்.30 அன்று தேர்தல் பிரச்சாரத்துக்கு வருகிறார். அப்போது அவரோடு தேர்தல் பிரச்சார மேடையினை பகிர்ந்து கொள்வதை தவிர்த்திட இருப்பதாகவும் மிசோராம் முதலமைச்சர் சோரம் தங்கா குறிப்பிட்டுள்ளார்.**

**40 சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட மிசோராம் சட்டமன்றத்தில் கடந்த தேர்தலில் ஒரே ஒரு இடத்தை மட்டுமே பா.ஜ.க. பெற்றிருந்தது.**

### ஒட்டன்சத்திரத்தில் பழனியாண்டவர்

# மகளிர் கலை - அறிவியல் கல்லூரி விரைவில் சொந்தக் கட்டிடத்தில் இயங்கும்!

## அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

ஒட்டன்சத்திரம், அக்.26-

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு உட்பட்ட குழந்தை வேலப்பர் கோவில் மலைப் பகுதியில் அனைத்து வசதிகளுடன் கூடிய கிரிவலப்பாதை அமைக்கும் பணிக்கு, காந்திநகர் சர்ச் முதல் காமாட்சி அம்மன் கோவில் வழியாக சின்னக்குளம் முடிவில் உள்ள ஓடையில் தடுப்புச் சுவருடன் கூடிய மழைநீர் வடிகால் மற்றும் பாலம் அமைக்கும் பணி ரூ.14.70 கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ஒட்டன்சத்திரம் உட்கோட்ட காவல் அலுவலகத்தை திறந்து வைத்தும் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது,



தமிழ்நாடு முதலமைச்சர் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற வகையில் சிறப்பான ஆட்சி நடத்தி வருகிறார். பொது மக்களின் நீண்டநாள் கோரிக்கையான கிரிவலப்பாதை அமைக்கும் பணிக்கு தற்பொழுது அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ஒட்டன்சத்திரம் நகரில் புதிதாக 13 ரேசன் கடைகள் பிரிக்கப்பட்டு சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அனைத்து வசதிகளுடன்கூடிய போட்டித்தேர்வு மையம் ரூ.11 கோடியில் காளாஞ்சிபட்டியில் விரைவில் துவங்கப்படவுள்ளது. தமிழகத்தில் இதுவரை 14 லட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. 36 ஆயிரம் நியாயவிலை கடைகளில் கண்கருவிழி மூலம் ரேசன் பொருட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒட்டன்சத்திரத்தில் பழனியாண்டவர் மகளிர் கலை மற்றும் அறிவியில் கல்லூரி ரூ.68 கோடி செலவில் சொந்த கட்டிடம் கட்டப்படவுள்ளது. பொது மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறை வேற்றும் வகையில் காப்பிலியப்பட்டியில் உரக்கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்கள் வீடுகளில் சேரும் குப்பைகளை உரமாக்கும் வகையில் மக்கும்குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து நகராட்சி பணியாளர்களிடம் வழங்கவேண்டும். நகரின் அனைத்து பகுதிகளிலும் குற்றசம்பவங்களை தடுக்கும் பொருட்டு கண்காணிப்பு கேமரா பொருத்தப்படவுள்ளது. ஒட்டன்சத்திரம் நகராட்சி தமிழகத்தில் முன்மாதிரி நகராட்சியாக மாற்றுவதற்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்படும். தொலைந்து போன குடும்ப அட்டைதாரார்களுக்கு ஆன்லைன் மூலம் ரூ.50 செலுத்தினால் வீடுதேடி குடும்ப அட்டை பெறும் வசதியும் நடைமுறையில் உள்ளது. ஒட்டன்சத்திரம் நகரிலுள்ள பழைய குடிநீர் குழாய்கள் அனைத்தும் அகற்றப்பட்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டு புதிய குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் குடிநீர் கிடைக்கும் வகையில் கூட்டு குடிநீர் திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. ஒட்டன்சத்திரம் நகரில் அனைத்து வசதிகளுடன் கூடிய நூலகம் அமைக்கப்படவுள்ளது. தகுதியான அனைவருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் வழங்கப்படும். விவசாயிகளுக்கு 2 லட்சம் புதிய மின் இணைப்புகள் வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பான ஆட்சி நடத்தி வருகிறார் என்று பேசினார். இந்நிகழ்வில் கோட்டாட்சியர் சரவணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாஸ்கரன், நகரச் செயலாளர் வெள்ளைச்சாமி, மாவட்ட அவைத்தலைவர் மோகன், ஒன்றியச் செயலாளர்கள் ஜோதீஸ்வரன், தர்மராஜ், நகர்மன்றதலைவர் திருமலைசாமி, செயற்குழுஉறுப்பினர்கண்ணன், டி.எஸ்.பி.முருகேசன், வட்டாட்சியர் முத்துச்சாமி, இன்ஸ்பெக்டர் ராஜசேகர், பொது குழு உறுப்பினர்கள் பாலு, செல்வராஜ், ஒன்றிய துணைச் செயலாளர்கள் முருகானந்தம், சிவக்குமார், சிவபாக்கியம்ராமசாமி, ஆணையாளர் மீனா, பொறியாளர் சக்திவேல், சுகாதார ஆய்வாளர் ராஜ்மோகன், கணக்காளர் சரவணன், இளநிலை உதவியாளர் ஈஸ்வரன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஆறுமுகம், அரசு ஒப்பந்ததாரர் வேலுச்சாமி உள்ளிட்ட நகர்மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

### நாடாளுமன்றத் தேர்தல் குறித்து

# கட்சிப் பிரதிநிதிகளுடன் தேர்தல் அதிகாரிகள் ஆலோசனை!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி பங்கேற்பு!

சென்னை, அக். 26 -

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் நாளை (அக்டோபர் 27ம் தேதி) வெளியிடப்படவுள்ளது. இந்நிலையில், அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு ஆலோசனை மேற்கொண்டார். சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்ற ஆலோசனையில், வாக்காளர் பட்டியலில் பெயர் திருத்தம், நீக்கம், இரட்டை பதிவு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக, அரசியல் கட்சி பிரதிநிதிகள் கருத்து தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில், தி.மு.க. சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி ஆகியோர் பங்கேற்று பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

இதேபோல், காங்கிரஸ், அ.தி.மு.க., மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்கேற்று தங்களது கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

**ஆர்.எஸ்.பாரதி பேட்டி!**

வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகளை சரி செய்ய வேண்டும் என்றும், தேர்தல் பணியில் ஈடுபடும் பெண் பணியாளர்களுக்கு உரிய அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்றும் தி.மு.க. சார்பில் வலியுறுத்தப்பட்டதாக ஆர்.எஸ்.பாரதி தெரிவித்தார்.

### தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் வரவேற்பு! பாராட்டு!

# ஆசிரியர் பணி நியமன வயது வரம்பை உயர்த்திய முதல்வருக்கு நன்றி !

## சங்கத் தலைவர் கு. தியாகராஜன் அறிக்கை!

சென்னை, அக்.26-

ஆசிரியர் பணி நியமன வயது வரம்பை உயர்த்தி, பல லட்சக்கணக்கான ஆசிரியர் பயிற்சி முடித்து பணி வாய்ப்புக்காக காத்திருக்கிற குடும்பங்களின் வாழ்விலே ஒளி விளக்கேற்றி ஆணையிட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து,

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில தலைவர் கு.தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

தமிழக பள்ளிக்கல்வித் துறை வரலாற்றில் 57 வயது வரை ஆசிரியர் பணி நியமனங்கள் நடைபெற்று வந்தன. பிற துறைகளைப் போன்று அல்லாமல் ஆசிரியர் பணியை மேற்கொள்பவர்கள் தொடர்ந்து தனியார் பள்ளிகளில் ஆசிரியராக பணியாற்றி வருகின்ற காரணத்தினால் 57 வயது வரை எப்பொழுது வேண்டுமானாலும் அரசு பணியில் ஆசிரியராக சேரலாம். இதனால் கற்பித்தல் பணிக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை என்பதை உணர்ந்த,

ஆசிரியர்கள் அரசு ஊழியர்களின் பாதுகாவலர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 57 வயது வரை ஆசிரியர் பணி நியமனங்கள் நடைபெறலாம் என்று ஆணையிட்டு பொன்னான வாய்ப்பினை ஆசிரியர் பயிற்சி முடித்தவர்களுக்கு வழங்கினார்.

ஆசிரியர் பயிற்சி முடித்து ஆசிரியர் பணி நிய மனத்திற்காக போட்டி தேர்வுகளுக்கு தயாராகிக் கொண்டிருக்கின்ற வேளையில் பல கட்ட முயற்சிகளை மேற்கொண்டு இருக்கும்போது கடந்த ஆட்சி காலத்தில் ஆட்சியாளர்கள் தன்னிச்சையாக ஆசிரியர் பணி நியமன வயது வரம்பை பொது பிரிவினருக்கு 42 ஆகவும் இதர பிரிவினருக்கு 47 ஆகவும் குறைத்து அதிர்ச்சி அளித்தனர்.

கடந்த ஆட்சியாளர்கள் ஆசிரியர் பணி நியமன வயது வரம்பை குறைத்ததன் விளைவாக ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள் இனி நமக்கு எதிர்காலமே இல்லை என்று கருதி மிகுந்த மன உளைச்சலில் வாழ்க்கை இருண்ட நிலையில் செய்வதறியாது புலம்பி வந்தனர்.

இதனால் அவர்கள் பல கட்ட போராட்டங்களை நடத்த வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டனர். பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி அவதியுற்று வந்தனர்.

கடந்த ஆட்சிகாலத்தில் TET தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் பல கட்ட போராட்டங்களை நடத்தியும் அன்றைய ஆட்சியாளர்கள் செவி மடுக்கவில்லை.

பல ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் மூடப்படுகின்ற அவல நிலை ஏற்ப்பட்டது

இவர்களின் நியாயமான கோரிக்கையை தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் ஆதரித்து தொடர்ந்து குரல் கொடுத்து வந்தது.

எங்கள் கோரிக்கையின் நியாயத்தன்மையை உணர்ந்து பள்ளி கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு சென்று இந்த கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றி ஆசிரியர் பணியில் சேர்ந்திட பணி நியமன வயது வரம்பை பொது பிரிவினருக்கு 42 வயதில் இருந்து 53 வயதாகவும், தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட இதர பிரிவி னருக்கு 47 வயதிலிருந்து 58 வயதாகவும் ஆணையிட்டு பல லட்சக்கணக்கான ஆசிரியர் பயிற்சி முடித்து பணி வாய்ப்புக்காக காத்திருக்கின்ற குடும்பங்களின் வாழ்விலே ஒளி விளக்கேற்றியுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் முயற்சியினை மேற்கொண்ட பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும் கல்வித்துறை உயர் அலுவலர்களுக்கும் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

இனிவரும் காலங்களில் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் நலன் சார்ந்த கோரிக்கைகள் ஆணைகளாக வெளிவரும் என்ற நம்பிக்கையை எங்களுக்கு அளிக்கிறது.

இவ்வாறு கு.தியாகராஜன் தனது அறிக்கையில் நன்றி தெரிவித்துள்ளார்.

### 'நீட் விலக்கு நம் இலக்கு'

# சென்னை - திருவள்ளூர் மாவட்ட சுற்றுச் சூழல் அணி கருத்தரங்கம்!

## மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ. - சூர்யா கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை!

சென்னை, அக். 26-

"நீட் விலக்கு நம் இலக்கு" என்ற தலைப்பில் சென்னை - திருவள்ளூர் மாவட்ட சுற்றுச்சூழல் அணியினர் நடத்திய கருத்தரங்கம் அன்பகத்தில் நடைபெற்றது.

மாநில துணைச் செயலாளர் பழ.செல்வகுமார் மற்றும் மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ., சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மு.பாஸ்கரன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்று உரையாற்றினர்.

கழக இளைஞரணி செயலாளர் மற்றும் இளைஞர் நலன் மற்றும் மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி அவர்களின் "நீட் விலக்கு நம் இலக்கு" என்ற மாபெரும் நீட் தேர்வு விலக்குக்கான கையெழுத்து இயக்கம் தொடங்கியதை தொடர்ந்து கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் சென்னை - திருவள்ளூர் மாவட்ட கழக சுற்றுச்சூழல் அணியினர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் மற்றும் "நீட் விலக்கு" வேண்டி பொது மக்களிடமும், மாணவர்களிடமும், தொழிலாளர்களிடமும் கையெழுத்து ஒப்புதல் எவ்வாறு பெறப்பட வேண்டும் அவர்களுக்கு நீட்டின் கொடுமையை உணர்த்த என்னென்ன செய்ய வேண்டும் என்ற கலந்தாய்வு கூட்டம் சுற்றுச் சூழல் அணி மாநில துணைச் செயலாளர் பழ.செல்வகுமார் தலைமையில் சென்னை அன்பகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாநில மருத்துவ அணி செயலாளர் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் சிறப்புரை ஆற்றினார். நீட் தேர்வினால் தமிழ் நாட்டுக்கு வரப்போகும் ஆபத்து மற்றும் நீட் தேர்வு விலக்கு அவசியம் பற்றி தலைமைக் கழக பேச்சாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்ட சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர்கள் மு.பாஸ்கரன், பாலசுப்பிரமணியம், பூண்டி அருண், ஜேக்கப், வெங்கடேசன், லயன் தீனதயாளன், ராமாபுரம் ராஜேஷ், நாகவள், சுந்தரராமன் மற்றும் சென்னை திருவள்ளூர் மாவட்ட கழக சுற்றுச்சூழல் அணி அனைத்து துணை அமைப்பாளர்களும் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (25.10.2023) தலைமைச் செயலகத்தில், திருமதி சரஸ்வதி செல்வராஜ். திருமதி மரகதம் மாரிமுத்து, திருமதி மொபினா, திருமதி செல்லம்மாள் ஆகியோர் சந்தித்து, பல ஆண்டுகளாக அரசு நிலங்களில் வீடுகளைக் கட்டி குடியிருப்போருக்கு ஒருமுறை வரன்முறை செய்யும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களில், கிராமக் கணக்குகளில் உரிய திருத்தங்கள் மேற்கொண்டு திருத்தப்பட்ட பட்டாக்களை வழங்கியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் உள்ளார்.

### ஆத்தூர் தொகுதியில்

# ரூ.9.26 கோடியில் மூன்று மேம்பாலங்கள்!

## நடவடிக்கை எடுத்த அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு விவசாயிகள் பாராட்டு!

ஆத்தூர், அக்.26-

ஆத்தூர் தொகுதியில் ரூ.9கோடியே 26லட்சத்து 29ஆயிரம் மதிப்பில் நீர்; வரத்து பாதைகளில் 3 பாலங்கள் கட்ட நடவடிக்கை எடுத்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு சிறுமலை அடிவாரப்பகுதி விவசாயிகள், ரெட்டியார்சத்திரம் மாங்கரை ஆற்று பாசன விவசாயிகள் மனதார பாராட்டும், நன்றியும் தெரிவித்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் தொப்பம்பட்டி மற்றும் காந்திகிராமம் ஊராட்சியைச் சேர்ந்த சிறுமலை அடிவாரப்பகுதி விவசாயிகள் தங்களது விளை பொருட்களான திராட்சை, காய்கறிகள், பூ வகைகளை வியாபாரத்திற்காக திண்டுக்கல் மற்றும் வெளிமாவட்டங்களுக்கு வாகனங்கள் மூலம் கொண்டுசெல்லும் வழியில் சிறுமலை நீர்வரத்து ஓடைப்பகுதியில் சிறுபாலம் ஒன்று இருந்தது. கனரக வாகனங்கள்செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இதனை அடுத்து தொப்பம்பட்டி ஊராட்சிமன்ற தலைவர் கருப்பையா தலைமையில் சிறுமலை அடிவார பாசன விவசாயிகள் தொப்பம்பட்டி, ஜாதிக்கவுன்டன் பட்டி இடையே வரும் வழியில் சிறுமலை நீர்வரத்து பாதையில் பாலம் ஒன்று அமைத்து கொடுக்க கோரிக்கைவிடுத்தனர். உடனடியாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி நபார்டு நிதி 202324 திட்டத்தின் கீழ் ரூ.1கோடியே 46லட்சத்து 94ஆயிரம் மதிப்பில் பாலம் கட்ட உத்தரவிட்டார்.

இதுபோல ரெட்டியார் சத்திரத்திற்கு உட்பட்ட மாங்கரை ஆற்று பகுதியில் மாங்கரையிலிருந்து கணேசபுரம் செல்லும் வழியில் மழை காலங்களில் அப்பகுதி பாசன விவசாயி கள் நெல், பருத்தி, மக்காச்சோளம், பூ வகைகள், காய்கறிகளை கொண்டுசெல்ல சிரமப்பட்டனர். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அப்பகுதியில் ரூ.3கோடியே 55லட்சத்து 8ஆயிரம் மதிப்பில் பாலம் கட்ட உத்தரவிட்டார்.

இதுபோல மாங்கரை ஆறு செல்லும் வழியில் உள்ள சில்வார்பட்டி பஞ்சாயத்திற்கு உட்பட்ட முத்தனம்பட்டி, கதிரயன்குளம் செல்லும் வழியில் பாலம் வசதி இல்லாமல் அப்பகுதி விவசாயிகள் கடும் அவதிப்பட்டதோடு இரவு நேரங்களில் அப்பகுதியில் செல்ல முடியாத நிலையில் இருந்தனர். ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணைப்பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி உடனடியாக அப்பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ரூ.4 கோடியே 19லட்சத்து 26 ஆயிரம் மதிப்பில் கனரக வாகனங்கள் செல்லும் அளவிற்கு உறுதியான பாலம் கட்ட உத்தரவிட்டார். ஆத்தூர் தொகுதி விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை எளிதில் கொண்டுசெல்ல அவர்களின் கோரிக்கையை ஏற்று நபார்டு நிதி யில் (2023 - 24) ரூ.9 கோடியே 26லட்சத்து 26ஆயிரம் மதிப்பில் 3 பாலங்களை கட்ட உத்தரவிட்ட ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருக்கு ஆத்தூர் தொகுதி விவசாயிகள் மனதார பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கூறுகையில் தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு ஊரக வளர்ச்சித்துறையில் நலத்திட்டங்கள் அதிக அளவில் செயல்பட்டு வருகிறது அதற்கு காரணம் திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள்தான் என்றார். தமிழகத்தில் உள்ள கிராமங்களிலும் மண் சாலைகள் இல்லாத அளவிற்கு அனைத்து கிராம சாலைகளும் தார்சாலைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. கிராம ஊராட்சிக்கு அடிப்படை தேவையான குடிதண்ணீர் வசதி, சாலை வசதி, தெருவிளக்கு வசதிகள் 100 சதவீதம் நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அனைத்து வீடுகளுக்கும் குடிதண்ணீர்; இணைப்புகள் கொடுக்கப்பட்டு அனைவருக்கும் மேல்நிலை தண்ணீர்; தொட்டிகள் மூலம் பாதுகாப்பான குடி தண்ணீர்; விநியோகம் செய்ய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார், மக்களின் அடிப்படை தேவை அறிந்து 100சதவீதம் அதை நிறைவேற்றக்கூடிய ஆட்சியாக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சி உள்ளது என்றார்.

### அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமை

# தேவகோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் இல்லத் திருமண விழா!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - தங்கம் தென்னரசு - பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

சிவகங்கை. அக். 26-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் நாகனி ஆர்.ரவி.இவரது தம்பி போஸ் இவரது மகள் பிரிய தர்ஷினிக்கும் தேவகோட்டைதாலுகா மேல உச்சாணி கிராமத்தைச் சேர்ந்த செல்லமுத்து ஜெயா மகன் கற்பூர சுந்தர பாண்டியயன் என்ற விஜய்க்கும் நாளை (27.10.2023 - வெள்ளிக்கிழமை காலை 9.15 மணியிலிருந்து 10.15. மணிக்குள் ராம் நகர் தாய் மஹால் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெறுகிறது.

சிவகங்கை மாவட்ட செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே. ஆர்.பெரியகருப்பன் தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைக்கிறார் .

இதில் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, தங்கம்தென்னரசு, பி.கே.சேகர்பாபு, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், முன்னாள் எம்.எல்.ஏ. கேஆர்.ராமசாமி மற்றும் அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகள் வாழ்த்திப் பேசுகிறார்கள் .

மணவிழா ஏற்பாடுகளை தேவகோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் நாகனி ரவி திருமதிஜோதி ஆர். போஸ் திருமதி தேன்மொழி ஆர்.இந்துமதி,பி. சூர்யா,ஆர். அரிகரன், ஆர். செல்லமுத்து திருமதி செ. ஜெயா மற்றும் உறவினர்கள் செய்து வருகிறார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வருகின்ற நவம்பர் 4ந்தேதி தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் தொடங்கப்படவுள்ள ”Health Walk திட்டத்தின் கீழ் சென்னையில் நேற்று (25.10.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 8 கிலோ மீட்டர் தூரம் நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதையை தேர்வு செய்து உறுதிபடுத்துவதற்கான ஆய்வு மேற்கொண்டார்கள். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி காவல்துறை ஆணையர் (அடையார்) பொன்.கார்த்திக்குமார், தெற்கு வட்டார துணை ஆணையர் எம்.பி.அமித், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம் உள்ளிட்ட உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**இதுவரை ரூ.5 கோடியே 85 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!**

**2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்**

**2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!**

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் மருத்துவம் - உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டுவருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகைவழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ. 5 கோடியே 85 லட்சத்து 90 ஆயிரம். இந்தமாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 25.10.2023 அன்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்து போகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப் படுகிறது..

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | ஜெ. ஆல்பட், கே.தெரு 416 முதல் 1516, கொருக்குப்பேட்டை, சென்னை – 21 | - 25,000/- |
| 2. | ச. காசி, சோலையப்பன் தெரு, தியாகராயர் நகர், சென்னை –17 | - 25,000/- |
| 3. | பி. ஹேமாவதி, தாசர்புரம் 3வது தெரு, திருநின்றவூர், திருவள்ளூர் – 602024. | - 25,000/- |
| 4. | என்.சம்பத்,பெரிய தெரு, தேசுமுகிப்பேட்டை, திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு | - 25,000/- |
| 5. | முக்தார் அகமத், முகமத்புரா முதல் தெரு 3வது சந்து, ஆம்பூர், திருப்பத்தூர் | - 25,000/- |
| 6. | என்.கனகராஜ், கருப்பட்டிச்சேரி, தத்துவாஞ்சேரி, திருவிடைமருதூர், தஞ்சை | - 25,000/- |
| 7. | எம்.நாச்சிமுத்து, முத்துவேணிநகர் வாங்கல்ரோடு, பாலம்மாள்புரம், கரூர் | - 25,000/- |
| 8. | வி. சேகர், வடக்குமட விளாகத் தெரு, இலால்குடி, திருச்சி – 621 601. | - 25,000/- |
| | மொத்தம் | ரூ. 2,00,000/- |

### வேலூர் மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில்

# பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு பேச்சு, கட்டுரைப் போட்டி!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!

வேலூர், அக். 26 -

வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டபேரவை தொகுதி உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

உலக தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், திராவிட மாடல் அரசியலின் தளகர்த்தர், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா ஆகிய திராவிட தலைவர்களின் தொண்டராகவும், உற்ற தோழனாகவும் தோளோடு தோள் நின்று சனாதான பிற்போக்கு ஆரிய மாயையில் சிக்கி சுயமரியாதை உணர்வை இழந்து ஆரிய அடிவருடிகளால் மூட பழக்க வழக்கத்தால் மூழ்கியிருந்த ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்தை தனது முற்போக்கு சிந்தையால் வீறுகொண்டு புதிய முற்போக்கு சிந்தனையின் ஊடே விழிப்படைய செய்து அதன்வாயிலாக கிடைக்க பெற்ற ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி எண்ணற்ற சமுதாய நலம் சார்ந்த திட்டங்களால் நவீன தமிழ் நாட்டை சிருஸ்டித்து இந்தியாவின் முதன்மைபெற்ற மாநிலமாக நிலைநிறுத்தி காட்டி தனது வாழ்வின் பெறும்பகுதியை தமிழுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் அர்ப் பணித்த தனிப்பெரும் தலைவர் தமிழ்நாட்டின் தலைமகன் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டை முன்னிட்டு திமுக மாணவர் அணி சார்பில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பேச்சு, கட்டுரை போட்டி நடத்திட திராவிட மாடல் ஆட்சியை தமிழ்நாட்டில் நடத்தி இந்தியளவில் முதன்மையான



முதல்வராக திகழும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் அறிவிப்பை தொடர்ந்து கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் ஆலோசனைப்படியும் இன்று (26.10.2023 - வியாழக் கிழமை) காலை 10.00 மணி முதல் வேலூர் மாவட்டச் செயலாளர், அணைக்கட்டு சட்ட பேரவை உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ ஆகிய எனது சிறப்புரையில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பி.எம்.தேவராஜ் தலைமையில், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள், டி.சுந்தர், வி.விக்ரம், இரா. பிரபாகரன், எம்.ஹரிநாத், அரவிந்த்அசோகன் மற்றும் வலைதள பொறுப்பாளர் பி.ஸ்ரீதேவி முன்னிலையில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, வேலூர் மாநகர செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர், கழக அமைப்புசாரா ஓட்டுனர் அணி தலைவர் து.மு. கதிர்ஆனந்த் எம்.பி, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர், கழக மகளிர் அணி பிரச்சாரகுழு செயலாளர் அமலுவிஜயன் எம்.எல்.ஏ, வேலூர் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் மு.பாபு, வேலூர் மாநகர மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார் ஆகியோர் வாழ்த்துரையில் பல்வேறு தலைப்புகளில் பேச்சு, கட்டுரை போட்டி மாவட்ட அளவில் வேலூரிலும், இறுதிபோட்டி சென்னையிலும் நடைபெற உள்ளது.

எனவே வேலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாநில, அணிகளின் துணைச் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்ட, வார்டு, ஊர்கிளை நிர்வாகிகள், தமிழ் ஆன்றோர், சான்றோர்கள், மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள் அனைவரும் கலந்துகொண்டு கலைஞர் நூற்றாண்டை நற்பேச்சாலும், முற்போக்கு எழுத்தாலும் போற்றுவோம் என அனைவரையும் வருக வருக என வரவேற்கிறேன்.

இவ்வாறு வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்ட பேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் தனது அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

# குமாரபாளையம் வடக்கு நகரக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

நாமக்கல் மேற்கு மாவட்டம், குமாரபாளையம் வடக்கு நகரக் கழகப் பொறுப்பாளர் எம்.செல்வம் அவர்களை, அவர் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **டி.விஜயகண்ணன்**, (5/10/5, காந்திநகர், குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம் 638 183.)அவர்கள், குமாரபாளையம் வடக்கு நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நகரக் கழக அமைப்பின் பிறநிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 25.10.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.





சீறாப்புராணம் அமுதகவி உமறுப்புலவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு எட்டயபுரம் மணிமண்டபத்தில் அமைந்துள்ள நினைவிடத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பெ.கீதாஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி. மார்க்கண்டேயன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் லட்சுமிபதி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்வில் கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் ஜேன்கிறிஸ்டிபாய், உமறுப்புலவரின் வாரிசுதாரர் காஜாமைதீன், கோவில்பட்டி கிழக்கு ஒன்றியச் செயலாளர் நவநீதகண்ணன், விளாத்திகுளம் மேற்கு ஒன்றியச் செயலாளர் அன்புராஜன், எட்டயபுரம் பேரூர் கழக செயலாளர் பாரதிகணேசன், எட்டயபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் ராமலட்சுமி சங்கரநாராயணன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இம்மானுவேல், தூத்துக்குடி வடக்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் சௌந்தரராஜன், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மேல்மலையனூர் ஒன்றியத்தில்

# ரூ 1.69 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் துவக்கி வைத்தார்!

*செஞ்சி, அக். 26 -*

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியத்தில் ரூ 1.69 கோடி மதிப்பீட்டில்கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கு 11.97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட அங்கன்வாடி மைய கட்டிடத்தினையும் அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் பள்ளிக்கல்வித்துறை சார்பில் அனைவருக்கும் கல்வி இயக்கம் திட்டத்தின் கீழ் மேல்மலையனூர் ஒன்றியம் செவலபுரை அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ 84.72 லட்சம் மதிப்பீட்டில் நான்கு கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கும், தேவனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 84.72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நான்கு வகுப்பறை கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்கும் பணிகள் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். பொதுப்பணித் துறை உதவி செயற்பொறியாளர் கணேசன், வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமை ஆசிரியர்கள் இளங்கோவன், அண்ணாமலை ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு செவலபுரை மற்றும் தேவனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூபாய் 1 கோடியே 69 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தலா நான்கு கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கான பணியை தொடங்கி வைத்தார்.

இதைத் தொடர்ந்து வலத்தி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 11.97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி மையக் கட்டிடத்தினை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர்கள் சாந்தி சுப்பிரமணியன், செல்வி ராம சரவணன், பொதுப்பணித் துறை உதவி பொறியாளர் பிரவீன் குமார்,ஒன்றிய கவுன்சிலர்கள் காசியம்மாள்கோதண்டம், ரவிச்சந்திரன், பெருமாள், சியாமளா ஜெயசங்கர், ஊராட்சி மன்ற தலைவர்கள்செவலபுரை சசிகலா ஜெய்சங்கர்,தேவனூர் சாந்தி சக்திவேல், வளத்தி விஜயலட்சுமி ஜெயக்குமார்,துணைத் தலைவர் கோவிந்தராஜ், பள்ளி ஆய்வாளர் விநாயகமூர்த்தி, ஆவின் இயக்குனர் ஆறுமுகம், அரசு வழக்கறிஞர் சீனிவாசன், பள்ளி மேலாண்மை குழு தலைவர் மகேஸ்வரி ஆறுமுகம் உள்ளிட்ட ஆசிரியர்கள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# விழுப்புரம் அகரம் காலனி பகுதியில் தீ விபத்து!

## பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு லட்சுமணன் எம்.எல்.ஏ. நிதியுதவி!

*விழுப்புரம், அக். 26 -*

விழுப்புரம் அருகே வி.அகரம் காலனி பகுதியைச் சேர்ந்தவர் அமுதா, கீதா இவர்களின் குடிசை வீடு மின் கசிவுக்காரணமாக நேற்று முன்தினம் தீப்பிடித்து எரிந்துள்ளது. இதில் வீட்டில் இருந்த பொருட்கள், கட்டில் உள்ளிட்ட பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து சேதமாகின.

இதனிடையே தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை லட்சுமணன் எம்.எல்.ஏ. சந்தித்து ஆறுதல் கூறினார். தொடர்ந்து அரிசி, காய்கறி, மளிகை பொருட்கள் மற்றும் நிதி உதவி உள்ளிட்ட நிவாரண உதவிகளை வழங்கினார். மேலும் அரசு தரப்பில் தொகுப்பு வீடுகள் கட்டித் தரவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர் பிரபாகரன், மாவட்டப் பிரதிநிதி ராஜேந்திரன், ஊராட்சி மன்ற தலைவர் முருகன், கிளைச் செயலாளர்கள் திருமுருகன், கேசவன், மாணவரணி விஜய், கிளை நிர்வாகிகள் சரண்ராஜ், ஆனந்தபாபு, பாண்டியராஜன், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன், தாசில்தார் யுவராஜ், வருவாய் ஆய்வாளர் கதிர்வேல், கிராம நிர்வாக அலுவலர் சுமதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. சார்பில் இராமநாதபுரத்தில் செயல்வீரர்கள் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் வ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில், மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்,ஏ,, அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கலந்து கொண்டனர். வரும் 30 ஆம் தேதி பசும்பொன் கிராமத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் ஜெயந்தி விழா நடைபெறுகிறது. இந்த விழாவில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்த வருகை தர உள்ளனர். முதல்வரை வரவேற்க 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கையில் இரு வண்ணக் கொடியுடன் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும். சேலத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞரணி மாநாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து பெருமளவிலான நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொள்ள வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# பழனிசாமியின் பொய் பல்லிளித்துவிட்டது!

**“இங்கிவனை நாம் பெறவே என்ன தவம் செய்துவிட்டோம்” - என்ற பாடல் வரிகளைக் கேட்டிருப்பீர்கள்! நமது எடப்பாடி பழனிச்சாமி அவர்களிடம் செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு அவர் அளித்துள்ள “அறிவுபூர்வ (?)” பதிலைக் கேட்டவுடன் ‘இங்கிவரை நாம் பெறவே என்ன பாவம் செய்துவிட்டோம்’ என்று விபரம் உள்ள ஒவ்வொரு அ.தி.மு.க. தொண்டரும் கொதித்துக் கொந்தளித்துப் போயிருப்பர்!**

‘கம்பராமாயணத்தை எழுதியவர் சேக்கிழார்’ என்று பேசியபோதுகூட அதனை ஜீரணித்துக் கொண்டு ‘சிலிப் ஆப் தி டங்’ - நா தடுமாற்றத்தில் பேசியிருப்பார் அல்லது அவர் பேசியதை வெட்டி ஒட்டி எதிர்க்கட்சியினர் சதி செய்திருக்கக்கூடும் என்றெல்லாம் சமாதானம் அடைந்திருந்த அ.தி.மு.க. தொண்டர்கள், இப்போது எடப்பாடி பழனிச்சாமி பத்திரிகையாளர் சந்திப்பில் கூறிய கருத்துகளைக் கேட்டு, பாவம், வாடி வதங்கிப் போய் நிற்கிறார்கள்.

**எடப்பாடி பழனிச்சாமியிடம் ஆளுநர் ரவி குறிப்பிட்ட ‘ஆரிய - திராவிடப் பிரச்சினை’ குறித்து செய்தியாளர் ஒருவர் ‘தமிழ்நாட்டில் ஆரியமும் இல்லை; திராவிடமும் இல்லை - என்று ஆளுநர் ரவி கூறியிருக்கிறாரே’ என்று கேட்ட போது,**

**‘இதையெல்லாம் பற்றிக் கூற புராணம் படிக்கணும்; நான் அந்த அளவுக்குப் படிச்சவனில்லை; இந்தக் கதை எல்லாம் படிச்சுச் சொல்லணும்னா பெரியதொரு ஆய்வு பண்ணனும்; ஆய்வு பண்ணினாதான் இதெல்லாம் உண்மையா? பொய்யான்னு தெரியும்; அதுக்கு நான் உட்பட்டவனல்ல”;**

**-என்று எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டுத் தனக்குப் புராண அறிவும் கிடையாது; வரலாற்று அறிவும் கிடையாது என்பதைத் தனது பதில் மூலம் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார்!**

அதைவிட அடுத்து செய்தியாளர் கேட்ட கேள்விக்கு அவர் தந்த பதில், தன்னைத் தானே; தான் ‘ஒன்றும் தெரியாத கூமுட்டை’ என்பதை அவரே வெளிப்படுத்திக் கொள்வதாக அமைந்தது தான்!

ஆரியம் குறித்து ஆளுநர் கூறியது பற்றி செய்தியாளர் கேட்டபோது, ‘அது பற்றி அவரை (ஆளுநரை)த்தான் கேட்கணும்; அவரைக் கேட்க வேண்டிய கேள்வியை என்னைப் பார்த்துக் கேட்டால் எனக்கு என்ன தெரியும்?’ - என்று கூறியதோடு விடாமல், (இந்தக் கேள்வியை) அறிஞர்களைப் பார்த்துக் கேட்டால் தான் அது சரியா தப்பான்னு தெரியும் என்று கூறி, தனது அறிவின் அளவை அவரை அறியாமலே வெளிப்படுத்திக் கொண்டுள்ளதைப் பார்த்து, அவரது அருகில் இருந்த செம்மலை உட்பட பலர், வேதனையை வெளிக்காட்டாமல் அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டிருந்த காட்சியையும் ‘வீடியோ’ பதிவு வெளிப் படுத்திக்கொண்டிருந்தது!



**இதையெல்லாம் பார்க்கும்போது, பா.ஜ.க. வையோ, அதன் பிரதிநிதியாகச் செயல்படும் ஆளுநரையோ எதிர்த்து வாய்திறக்க எடப்பாடி பழனிச்சாமி திணறுவதையும், நிருபர் கேட்ட கேள்விக்கு ‘தத்துபித்து’ என்று பதில் சொல்லி, மன்னிக்கவும் - உளறிக்கொட்டிடுவதிலிருந்தே, எடப்பாடி பழனிச்சாமி நடத்தும் ‘பா.ஜ.க. எதிர்ப்பு’ என்பது ‘திட்டமிடப்பட்ட நாடகம்’ என்பது தெளிவாகவில்லையா?**

கட்சியின் பெயரோ; அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்! ஆனால் அதன் தலைவரோ திராவிடம் பற்றி ஆராய்ச்சி செய்யுமளவு அதிகம் படித்தவனில்லை என்கிறார்!

புராணத்துக்கும், வரலாற்றுக்கும் உள்ள வித்தியாசம் கூட தெரியாதவராக தன்னைத் தானே வருணித்துக் கொள்கிறார்!

**‘அறிஞர்களைப் பார்த்துக் கேட்கும் கேள்வியை என்னைப் பார்த்துக் கேட்கிறீர்களே’ என்று தனது அறிவிலித்தனத்தை அம்பலப்படுத்திக் கொள்கிறார்!**

**இதை எல்லாம் காணும்போது, எடப்பாடி பழனிச்சாமியை கட்சித் தலைவராக ஏற்றுக்கொண்டு அரசியல் நடத்த நினைக்கும் அ.தி.மு.க.வின் சில அறிவு சார்ந்த நமது பழைய நண்பர்களுக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்!**

பழனிச்சாமியின் ‘பாரதிய ஜனதா எதிர்ப்பு’ என்பது, ‘கூட்டணி முறிவு’ எனக் கூறுவதும் கழகத் தலைவர் தளபதி குறிப்பிட்டபடி , **‘அது ஒரு மிகப் பெரிய நாடகம்; நரித்தனத்தின் அடையாளம்!’**

ஆம்; ‘கெட்டிக்காரன் புளுகுக்கே எட்டு நாள்’ என்பார்கள். எடப்பாடி பழனிச்சாமி போன்ற போர்வழிகளின் புளுகுக்கு அத்தனை நாள் தேவையில்லை; ஓரிரு நாளிலேயே வெளிச்சத்துக்கு வந்துவிட்டது!

**கழகத் தலைவர் தளபதி குறிப்பிட்டபடி ‘பச்சைப் பொய்யர்’ பழனிச்சாமி தன்னை செய்தியாளர்களிடம் அடையாளம் காட்டிக் கொண்டுவிட்டார். பச்சைப் பாம்பை பச்சைக் கொடியாக எண்ணியிருக்கும் சில பரிதாபத்துக்குரிய அ.தி.மு.க.வின் உண்மைத் தொண்டர்கள் தெளிவு பெறுவார்களாக!**

**பொய்க்கால் குதிரையை நம்பி போர்க்களத்தை எதிர்கொள்ள நினைக்கும் அ.தி.மு.க.வின் உண்மைத் தொண்டர்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள்!**

**சிலந்தி**



அக்டோபர் 26ல்
கலைஞர் 100 1924 - 2023
விருதுநகர்
தெற்கு - வடக்கு மாவட்ட திமுக சார்பில்
கழக மூத்த முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கும் விழா மற்றும்
மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள்
கூட்டத்திற்கு பங்கேற்க வருகை தரும்
மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின்
கழக இளைஞரணி செயலாளர்,
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
அவர்களையும்
திருமிகு தயாநிதி மாறன் அவர்களையும்
மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்
மாண்புமிகு K.K.S.S.R.இராமச்சந்திரன்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களையும்
விருதுநகர் தெற்கு மாவட்ட திமுக செயலாளர்
மாண்புமிகு தங்கம் தென்னரசு B.E அவர்களையும்
நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்
விருதுநகர் வடக்கு மாவட்ட திமுக செயலாளர்
அன்புடன் வரவேற்கிறேன்...
K.K.S.S.R.R.ரமேஷ்
விருதுநகர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர்
கே.வினோத்குமார் க.இளங்கோ இரா.கோகுல் த.தட்சணாமூர்த்தி
விருதுநகர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்
தி.மு.க
விளையாட்டு மேம்பாட்டு அணி
KUMAR DESIGN 96594 62582




மாண்புமிகு தமிழக முதல்வர்
நாள் : 26.10.2023
வியாழக்கிழமை
இடம் : விருதுநகர்
கழகத் தலைவர்
அவர்களின் பொற்கால ஆட்சியில்...
விருதுநகர் தெற்கு - வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில்
இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்
மற்றும் கழக மூத்த முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கும் விழாவிற்கு
விருதுநகருக்கு வருகை தரும்...
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணிச்செயலாளர்,
மாண்புமிகு. உதயநிதிஸ்டாலின் அவர்களை
வருக ! வருக !! என வரவேற்கிறோம்...
மாண்புமிகு. K.K.S.S.R.இராமச்சந்திரன் அவர்கள்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்,
விருதுநகர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்.
திருமிகு. தயாநிதி மாறன் அவர்கள்
மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்
மாண்புமிகு. தங்கம் தென்னரசு B.E., அவர்கள்
நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர்,
விருதுநகர் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்.
K.G.இராஜகுரு
அமைப்பாளர்
வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி
R.மாதவன் G.வெயில்ராஜ் M.சரவணக்குமார் P.கார்த்திக் S.ராஜ்குமார் P.சுந்தரமூர்த்தி
வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள்
வடக்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி



கலைஞர் 100
1924-2023
நாள் :
26.10.2023
வியாழன்
இடம் :
விருதுநகர்
விருதுநகர் மாவட்ட வளர்ச்சி பணிகள் ஆய்வு மற்றும்
மாவட்ட இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டம் மற்றும்
கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்விற்கு வருகை தரும்
கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே
வருக! வருக!!
மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்
விருதுநகர் தெற்கு மாவட்ட கழக செயலாளர்
அமைச்சர் – வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
மாண்புமிகு தங்கம் தென்னரசு B.E.,
விருதுநகர் வடக்கு மாவட்ட கழக செயலாளர்
அமைச்சர் – நிதி மற்றும் மனிதவள மேம்பாடு, மின்சாரத்துறை
க.முருகேசன் B.A.,
ஒன்றிய கழக செயலாளர் - சாத்தூர் கிழக்கு
அ.கடற்கரை ராஜ்
ஒன்றிய கழக செயலாளர் - சாத்தூர் மேற்கு
எஸ்.குருசாமி
சாத்தூர் நகர கழக செயலாளர் - நகர்மன்ற தலைவர்
ஆர்.காந்திமதி இராஜேந்திரன்
முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் - மம்சாபுரம்(சாத்தூர் ஒன்றியம்)
வரவேற்று மகிழும் :
எம்.எஸ்.லட்சுமி காந்தன் B.A.,B.Ed.,
விருதுநகர் தெற்கு மாவட்ட தலைவர்
திமுக - கலை, இலக்கிய, பகுத்தறிவு பேரவை




விருதுநகர் தெற்கு - வடக்கு மாவட்ட தி.மு.க.




26.10.2023

விருதுநகர் மாவட்டத்திற்கு வருகை தரும்

# இளம்தலைவர்

அவர்களே... வருக.. வருக.!

மாண்புமிகு. **தங்கம் தென்னரசு** B.E.,

விருதுநகர் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர்

**எஸ்.ஏ.உதயசூரியன்**
சிவகாசி மாநகர கழகச் செயலாளர்

**சிவகாசி மாநகர திமுக**


நாள்: 26.10.2023
பொற்கிழி வழங்கிடவும் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்திற்கும்
வருகை தரும்
கழக இளந்தலைவர்
மாநில இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
அவர்களே வருக! வருக!!
மாண்புமிகு. K.K.S.S.R.இராமச்சந்திரன் அவர்கள்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
விருதுநகர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்
உயர்திரு. தனுஷ் எம்.குமார் அவர்கள்
தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர்
தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
துணை அமைப்பாளர்கள்
தங்கம் ரவிக்கண்ணன்
சு.பாபு
பாசறை ஆர். ஆனந்த்
என்.பி.கார்த்திக்
க.கார்த்திக்
மாண்புமிகு. தங்கம் தென்னரசு அவர்கள்
நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர்
விருதுநகர் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்
திரு. R.கிருஷ்ணகுமார் அவர்கள்
விருதுநகர் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்
துணை அமைப்பாளர்கள்
N.C.சிதம்பர பாரதி
M.சேகர்
ஜெகன் பால்பாண்டியன்
S.அய்யனார்
M.கார்த்திகேயன்
S.திலீபன் மஞ்சுநாத்
விருதுநகர் தெற்கு / வடக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி
MAHA
Ph : 8608118152

## திராவிடம் - ஆரியம் பற்றிய அடிப்படை புரிதலே இல்லாமல்

# ஆளுநர் ஆர்.என்.ரவி பொய் - புரட்டுகளையே பேசி வருகிறார்!

## ‘சன் நியூஸ்’ கேள்விக் களத்தில் அரசியல் ஆய்வாளர் தமிழ் காமராசன் பேட்டி!

சென்னை, அக். 26-

**ஆரியம் - திராவிடம் பற்றிய அடிப்படை விஷயங்களே தெரியாமல் ஆளுநர் ஆர்.என். ரவி பொய் - புரட்டுகளையே பேசி வருகிறார் என்று ‘சன் நியூஸ்’ கேள்விக் களம் விவாதத்தில் அரசியல் ஆய்வாளர் தமிழ் காமராசன் பேட்டி அளிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

‘சன் நியூஸ்’ தொலைக்காட்சியில் மு.குணசேகரனை நெறியாளராகக் கொண்டு நடைபெற்ற ‘கேள்விக் களம்’ விவாதத்தில் அரசியல் ஆய்வாளர் தமிழ் காமராசன் அளித்த பேட்டி வருமாறு:-

**நெறியாளர் மு.குணசேகரன்** : ஆளுநர் ஆர்.என். ரவி மீண்டும் ஒரு சர்ச்சையை தொடங்கி வைத்திருக்கிறார். அல்லது ஏற்கனவே அவர் பேசி வரக்கூடிய சர்ச்சையான கருத்துகளின் மீட்சியாக சில கருத்துகளைச் சொல்லி இருக்கிறார்.

ஒன்று - சுதந்திரப்போராட்ட வரலாற்றை தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள் இருட்டடிப்பு செய்து விட்டார்கள். மறைத்து விட்டார்கள். ‘இந்தியாவின் வரலாற்றை தென் பகுதியில் இருந்து எழுத வேண்டும். தமிழ்நாட்டிலிருந்து இந்திய விடுதலைக்காகப் போராடியவர்களுடைய வரலாற்றை இந்தியாவில் வட இந்திய வரலாற்று ஆசிரியர்களால் சரியாக ஆவணப்படுத்தப் படவில்லை’ என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் வலியுறுத்தி வரக் கூடிய ஒரு காலக் கட்டத்தில் ஆளுநர் ஆர்.என். ரவி இப்படியான ஒரு கருத்தை தெரிவித்து இருக்கிறார்.

இரண்டாவது - ஆரியம், திராவிடம் என்பதெல்லாம் ஒன்றும் இல்லை. கால்டுவெல் உருவாக்கியது. தவறான கருத்தாக்கம் என்றும் அவர் விமர்சித்திருக்கிறார். அதற்கும் தி.மு.க.வின் பொருளாளர் டி.ஆர்.பாலு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் காட்டமாக கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

மூன்றாவது - விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்காதவர்கள் திராவிட இயக்கத்தவர்கள் என்றும் ஆளுநர் சொல்லி இருக்கிறார்.

நாடு விடுதலையான போது அதனை பெரியார் எதிர்த்தார், அண்ணா வரவேற்றார். ‘இன்ப நாள்’ என்று ஒருவரும், ‘துக்க நாள்’ என்று ஒருவரும் சொன்னதாகக் கூறிய கருத்தை டி.ஆர்.பாலு மேற்கோள் காட்டியிருக்கிறார்.

இன்னொரு எதிர்வினையை பலர் எழுப்பி இருக்கிறார்கள்; நாடு விடுதலை ஆன நேரத்தில் விடுதலைப் போராட்டத்தில் ஆர்.எஸ்.எஸ்., சங்பரிவாருக்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா? அவர்கள் கொண்டாடுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது.?

இந்தியாவின் தேசியக் கொடியையே பல ஆண்டுகாலம் ஏற்றுக் கொள்ளாத இயக்கம் ஆர்.எஸ்.எஸ். இயக்கம் என்று எதிர் முழக்கம் வருகிறது. அளுநருடைய பேச்சு சரியான ஒன்றா, வேண்டும் என்றே சர்ச்சைக்காகப் பேசுகிறாரா? என்று பல கோணங்கள் எழுகின்றன. இதுகுறித்து எல்லாம் நாம் விவாதிக்கலாம். தமிழ் காமராசன் அவர்களே, முதல் ஒவ்வொரு பாயின்ட்டாக பேசலாமா? இல்லை ஆளுநர் பேசிய மூன்றையும் சேர்த்து ஒன்றாகப் பேசலாமா. மூன்று விஷயங்கள் குறித்து ஆளுநர் பேசி இருக்கிறார். ஒன்று ஆரியம், திராவிடம், இன்னொன்று சுதந்திரப் போராட்ட வீரர்களை மதிக்காமல் இருட்டடிப்பு செய்துவிட்டார்கள். சுதந்திரப் போராட்டத்தில் யார் பங்கேற்றார்கள் யார் இருட்டடிப்பு செய்தார்கள் என்பது குறித்து கூறுங்கள்.

**அரசியல் ஆய்வாளர் தமிழ் காமராசன் :** ஆரியம் - திராவிடம் என்பது பற்றி ஆளுநர், மிக நீண்ட காலமாகவே பேசிக் கொண்டிருக்கிறார். அவர் அடிப்படை புரியாமல் பேசிக் கொண்டு இருக்கிறார். பொது விவாதங்களில் இதுபற்றியெல்லாம் எடுத்துச் சொல்லியாகிவிட்டது. இருந்தாலும் தொடர்ச்சியாக அவர் இப்படியே பேசிக் கொண்டிருக்கிறார். அவருக்கு என்ன பிரச்சினை இருக்கு? அவருக்கு அடிப்படையான மொழி நூல் அறிவு இருக்கிறதா? எந்தவிதமான அனுபவமே இல்லாமல் ஆளுநர் இப்படி பேசிக் கொண்டு வருகிறார்.

இப்போது சமீபத்தில் ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி போட்டு இருக்கக் கூடிய ஒரு புத்தகம். தெலுங்கில் இருக்கக் கூடிய மிகப் பெரிய அறிஞர் கிருஷ்ணமூர்த்தி எழுதி இருக்கிறார். அவர் திராவிட மொழிக் குடும்பம் பற்றி எழுதி இருக்கிறார். இந்தியாவில் தெற்காசிய நிலப் பகுதியில் தனித்துவமான மொழிக்குடும்பம் இந்தியா முழுமையும் பரவி இருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

**வரலாற்று ஆய்வுகள், பண்பாட்டு ஆய்வுகளில் ஆரியர், முக்கியமான ஒன்று திராவிட பண்பாட்டு நீரோட்டம் அப்படி என்று பேசி இருக்கிறார்கள். தெற்காசிய மக்கள் பண்பாட்டில் இன்றைக்கும் மேலோங்கி இருப்பது அதுதான். வங்காளத்தைச் சேர்ந்த அறிஞர் பேசி இருக்கிறார்.**

**வட இந்தியாவைச் சேர்ந்த இன்றைக்கு இருக்கின்ற திலிப் சக்கரவர்த்தி இன்றைக்கு தொழில் துறை பேராசிரியர் என்று எல்லோருமே பேசி இருக்கிறார்கள். ஆனால் ஆளுநருக்கு சமகாலத்து ஆய்வுகள் பற்றியோ, வரலாற்று ஆய்வுகள், மொழியியல் ஆய்வுகளில் எந்தப் பரிட்சமும் இல்லை.**

**இவர் ஆட்சிப் பணியில் இருந்தவர். ஆட்சிப் பணியில் இருக்கிறவர்கள், தங்களுக்குத் தெரியாத விஷயங்களைப் பற்றி பொதுவாக பேசவே மாட்டார்கள். ஆனால் ஆளுநர் ஆட்சிப் பணியில் இருந்தவர் தனக்குத் தெரியாத விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டு இருக்கிறார் - அதுதான் பிரச்சினை.**

**நெறியாளர் மு.குணசேகரன்** : திராவிடம் - ஆரியம் அப்படி என்பது எல்லாம் ஒன்றுமே இல்லை கால்டுவெல் உருவாக்கிவிட்டுப்போன ஒரு தவறான தகவல் என்ற ஒரு கருத்தைச் சொல்கிறாரே?

**தமிழ் காமராசன் :** பொது மனிதர் கூட அதனைப் பற்றிப் பேசலாம். பொது மனிதர் எப்போது பேச வேண்டும். அதில் இருக்கக் கூடிய அடிப்படையான விவரங்களை தெரிந்து கொண்டு அதில் பேச வேண்டும். அந்த விவரங்கள் தெரியாமல் பேசுவது தவறு. இது மிகவும் சாதாரண விஷயம், அவர் நேற்று முன்தினம் பேசியதில் கால்டுவெல் பள்ளிக் கல்வியையே முடிக்காதவர் என்று சொல்கிறார். கால்டுவெல் அவர்களை இங்கிலாந்து அரசாங்கமே இங்கே அனுப்பி வைத்தது என்று சொல்கிறார்.

**முதல் பிரச்சினை அவர் அயர்லாந்தில் பிறந்தவர். ஸ்காட்லாந்தில் வளர்ந்தவர். ஸ்காட்லாந்து பல்கலைக் கழகத்தில் படித்தவர். அந்தப் பல்கலைக் கழகத்தின் மிகப் பெரிய படிப்பான டி.லிட் வரைக்கும் அவர் படித்தவர். அந்தக் காலத்தில் மிகப் பெரிய பட்டம் பெற்றவர். உலகம் முழுவதும் மதிக்கக் கூடிய அறிஞராக இருந்தவர்.**

**அவர் 25 வயதில் இங்கு வரும் போது மிகப் பெரிய அறிஞராகவே வருகிறார். அவர் எந்தவிதமான பட்டங்களையும், பதவிகளையும் எதிர்பார்த்து வரவில்லை. சென்னையில் இருந்து 400 கிலோ மீட்டர் திருநெல்வேலிக்கு நடந்தே போனார். இன்றைக்கு திருநெல்வேலி வெயில், அவர் ஒரு குளிர்ந்த தேசத்தில் வாழ்ந்தவர். திருநெல்வேலி வெயிலில் போய் வாழ்ந்தார். இன்றைக்கு இடையன்குடி என்கின்ற கிராமத்தைப் போய் பாருங்கள். எப்படி ஒரு கிராமம் இருக்கணும்? என்பதை 200 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கிக் காட்டியவர் கால்டுவெல்!**

**இந்த நாட்டில் சாதாரணமாக வாழ்ந்து கொண்டு இருந்த மக்களுக்காக தன்னுடைய வாழ்வையே அர்ப்பணித்தவர். வெறும் அறிஞர் மட்டுமல்ல; மக்களை நேசித்தவர். அத்தகைய ஒருத்தரைப் பற்றிப் பேசும் போது அடிப்படை விவரங்கள் கூடத்தெரியாமல் ஆளுநர் பேசுகிறார்!**

ஆனால் அவர் பேசலாம். அவருக்கு இருப்பது வெறும் அறியாமையும் வெறுப்புணர்ச்சியும் மட்டும்தான் இருக்கின்றது. ஆரியம், திராவிடம் பற்றி பேசுவதற்கு முன்பு, அதற்கான ஒரு அடிப்படையான விஷயங்களை ஆளுநர் தெரிந்து கொள்ள வேண்டும்.

மூனறாவது - இந்த ஊரில் சாதி வேறுபாடுகள் அதிகமாக இருக்கிறது. எல்லாரையும் சாதிக் கண்ணோட்டத்தோடு பார்க்குறார்கள். விடுதலைப் போராட்ட வீரர்களையே மதிக்கத் தெரியவில்லை. என்றெல்லாம் சொல்கிறார் ஆளுநர்.

ஒரு அடிப்படையான விஷயம் என்னவென்றால், இந்த நாட்டில் இரண்டு விடுதலைப் போர்கள் நடைபெற்றன. ஒன்று ஆங்கிலேயர்களிடமிருந்து அரசியல் விடுதலைப் பெற வேண்டும், அந்நியர் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற வேண்டும் என்பது ஒன்று.

இன்னொன்று - சமூக விடுதலைப் போர், சமூக விடுதலைப்போர் என்பது, அடிப்படையில் இந்தச் சமூகத்தில் யாரும் உயர்ந்தவர்களோ, தாழ்ந்தவர்களோ இல்லை, எல்லோரும் சமமானவர்கள் என்பதற்காக ஒரு போர் நடைபெற்றது. இந்த சமூக விடுதலைப் போரை நடத்தியது திராவிட இயக்கம். சாதி எதிர்ப்பு இயக்கம். இதில் தனித்தனியாக நடத்த வேண்டிய அவசியம் ஏன் வந்தது? தேசிய விடுதலைப் போரை நடத்தியவர்கள் இந்த நாட்டில் மேலாடை அணிவதற்கு உரிமை இல்லை. பொது இடங்களில் நுழைவதற்கு அனுமதி இல்லை. இந்த நாட்டில் மிகப் பெரும்பான்மையான மக்களுக்கு மிகப் பெரும் கொடுமைகள் நிகழ்ந்து கொண்டிருந்த போது, அதைப்பற்றி கவலைப் படாமல் அந்நியரிடமிருந்து விடுதலை என்று பேசிக்கொண்டிருந்ததால் தான் தனியாக ஒரு விடுதலை இயக்கம் தோன்றியது.




அதுதான் சமூக விடுதலை இயக்கம். அந்த சமூக விடுதலை இயக்கம் அந்நியர்கள் இந்த நாட்டை ஆள வேண்டும் என்று சொல்லவில்லை. அந்நியர்கள் என்றாலும் சரி, இந்த நாட்டை ஆள வருகின்றவர்களானாலும் சரி யாரும் ஆதிக்கம் செய்யக் கூடாது என்பதற்காகப் போராடினர்.

**பெரியார் அவர்கள் கூறியது, ‘வெள்ளைக்காரர்கள் போய் விட்டார்கள் என்றாலும் பிரச்சினை தீர்ந்துவிடவில்லை. இந்த நாட்டில் பார்ப்பன ஆதிக்கம் என்று ஒழியப்போகிறது’ என்றுதான் கேட்டார். அண்ணா அவர்கள் அந்த ஆதிக்கத்தை நாங்கள் தொடர்ந்து எதிர்த்துப் போராடி ஒழிக்கப் போகிறோம் என்று கூறினார்.**

**அண்ணா அவர்கள் தலைமையில் தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்தப்பிறகு இந்த சென்னை மாநகரத்தில், எத்தனை சிலைகளை நிறுவி இருக்கிறார்கள். அழகு முத்துக் கோன் சிலை இருக்கிறது. அந்தச் சிலையை நிறுவியவர்கள் யார்? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான்.**

வட இந்திய, தென் இந்திய வரலாற்றை எடுத்துக் கொள்ளுங்கள்; தென்னிந்தியாவில் அரசியல் ரீதியாகப் போராடியவர்களில் எத்தனை பேர் மதிப்பு வாய்தவர்களாக இருக்கிறார்கள். வ.உ.சி. இருந்தார். வ.உ.சி. அவர்கள் இந்த நாட்டுக்கு, வட இந்தியாவில் இந்த நாட்டிற்காக போராடியவர்களில் எவருமே செய்யாத வகையில் அரிய காரியத்தைச் செய்தார். நாட்டின் விடுதலைக்காக தனியாக ஒரு சுதேசி கப்பல் நிறுவனத்தையே உருவாக்கினார். அவருடைய வரலாறு தேசிய ஒன்றிய அரசில் இருந்து, ஆவணப்படுத்தப்பட்டு இருக்கின்றதா என்றால் இல்லை!

சரி இதனை விட்டு விட்டு நினைவிடங்கள் என்ற வகையில் டெல்லியிலோ, மற்ற இடங்களிலோ அவருக்கு என்ன மதிப்பு வழங்கப் பட்டு இருக்கிறது. அந்தக் காலத்தில் அவர் மிகப் பெரிய மூன்று முப்பெரும் தலைவர்களில் ஒருவர். பாலகங்காதரத் திலகர், விபின் பாலச்சந்தர், வ.உ.சி. என்று மிகப்பெரிய தலைவர்களில் ஒரு தலைவராக வ.உ.சி. இந்திய அளவில் இருந்தார். அவருக்கு என்ன மதிப்பும் மரியாதையும் இந்த ஒன்றிய அரசால் கொடுக்கப்பட்டு இருக்கிறது?

**நெறியாளர்:** தென்னிந்தியாவில் திலகர் திடல் இருக்கும் பட்டேல் சாலை இருக்கும், ஜவகர்லால் நேரு சாலை இருக்கும். ஆனால் வட இந்தியாவில் இப்படி தென்னிந்திய தலைவர்கள் பெயர்களில் எதுவும் இல்லையே?

**தமிழ் காமராசன்:** ஆமாம், வட இந்தியாவில், தென்னிந்திய விடுதலை வீரர்கள் போற்றப் படவே இல்லை. ஆளுநர் அங்கே போய் பாடமாக எடுக்க வேண்டும். சில நாட்களுக்கு முன்பு என்ன செய்தார். பூணூல் அணிவிக்கின்ற விழாவில் போய் கலந்து கொண்டார். எதற்காக? அவர் சம தர்மம் என்று சொல்லி, வட இந்தியாவில் போய் பா.ஜ.க.வுக்கு, பல சாதிகளை திரட்டி ஓட்டு வங்கியாக மாற்றப் போகிறோம் என்று சொல்லி, அந்த அரசியலை செய்யத்தானே அதில் கலந்து கொண்டார். ஒவ்வொரு சமூகத்தையும் திரட்டுவ தற்காகத்தான் இப்படி ஒவ்வொரு சாதியாக கூப்பிட்டுக் கொண்டு இருக்கும் வேலையைத்தான் ஆளுநர் செய்து கொண்டு இருக்கிறார்.

ஆளுநர், ஆளுநர் வேலையைச் செய்யவில்லை, ஆளுநர் என்ன வேலை செய்யணும், ஒரு மாநில சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்புகின்ற சட்ட முன்வடிவுகளையோ, தீர்மானங்களையோ அவர்கள் அனுப்புகின்ற கோப்புகளில் கையெழுத்துப் போடவேண்டும். அந்த வேலையை அவரால் செய்யவே முடியவில்லை. டி.என்.பி.எஸ்.சி.க்கு தலைவராக ஆக வேண்டியவர், இவர் ஆக முடியுமா? ஆக முடியாதா? அதில் ஒரு முடிவு எடுக்க அவரால் முடிய வில்லை. நீட் தேர்வுக்கு விலக்கு கொடுக்க முடியுமா? கொடுக்க முடியாதா? இதுமாநில உரிமைக்குள் வருகின்றதா? வரவில்லையா? என்று ஒரு முடிவு எடுக்க அவரால் முடிய வில்லை. அந்தக் கோப்பை நேராக குடியரசுத் தலைவருக்கே அனுப்பி விட்டார்.

இந்த ஆண்டு, ஜனவரி மாதத்தில் இந்த நாட்டை தமிழ்நாடு என்று அழைக்கக் கூடாது. தமிழகம் என்று அழைக்க வேண்டும் என்று கூறினார். தொடர்ச்சியாக இந்த மாநிலத்தினுடைய மக்கள் உணர்வுகளை புண்படுத்தும் விதமாக, மக்களைஅவமதிக்கும் விதமாக ஆளுநர்பேசிக் கொண்டே வருகிறார்.

**கால்டுவெல், ஐயர்லாந்தில் பிறந்து, ஸ்காட்லாந்தில் வளர்ந்து, இந்த நாட்டு மக்களுக்காக அள்ளும் பகலும் உழைத்தவர் அவர். அவரைப்பற்றி இப்படி ஆளுநர் பேசுகிறாரே, இவர் ராஜ்பவனில் உட்கார்ந்து கொண்டு முழு நேரம் ஏ.சி.யில் இருந்துகிட்டு, இந்த நாட்டு மக்களின் பணத்தை சம்பளம் - என்று எல்லா வகையிலும் பயன்படுத்திக் கொண்டு, இவர் இந்த நாட்டு மக்களைப் பற்றி எதுவுமே தெரியாமல் உளறிக் கொண்டிருக்கிறார்.**

**ஆளுநருக்கும் அண்ணாமலைக்கும் மிகப் பெரிய போட்டி நடந்து கொண்டிருக்கிறது. யார் உண்மையான பா.ஜ.க.வின் தலைவர் என்று. சில நாட்களுக்கு முன்பு பத்திரிகையாளர் சந்திப்பில் அண்ணாமலை பேசினார். பேசியதற்கு - எந்தவிதமான ஆதாரமும் எதுவும் இல்லை. “பொய், பச்சை பொய்” என்று இந்து பத்திரிகையில் அதனை எடுத்துப் போட்டு விட்டார்கள். அதற்காக அண்ணாமலை ஒரு வருத்தம் தெரிவித்தாரா? நான் தவறாக சொல்லிவிட்டேன் என்று. சொல்லவில்லை. ஒரு பொய்யை வெறுப்பூட்டக் கூடிய வகையில் பேசி விட்டு திரும்ப அவர் மன்னிப்பு - வருத்தம் என்று சொன்னாரா என்றால், சொல்லவில்லை!**

அதே போல தான் ஆளுநரும் தொடர்ச்சியாக சொல்லிக் கொண்டிருக்கிறார். அண்ணாமலையாவது ஒரு அரசியல் கட்சித் தலைவர், ஆனால் இவர், ஆளுநராக, ஆளுநர் மாளிகை ராஜ் பவனில் உட்கார்ந்து கொண்டு ஒரு அரசியல் கட்சியினுடைய மூன்றாம் தர மேடைப் பேச்சாளரை விட மிக மோசமாகப் பேசிக்கிட்டு இருக்கிறார்.

ஆளுநருக்கு கால்டுவெல் என்ன படித்து இருக்கிறார்? என்றுகூட தெரியவில்லை. அவர், திராவிட மொழிகளின் மூல இலக்கணம் படித்து இருக்கிறாரா? இல்லை! ஆளுநர் இதில் எல்லாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்றால், அவர் இந்தப் பதவியை இராஜினாமா செய்துவிட்டு, வீட்டில் உட்கார்ந்து கொண்டு தீவிரமாகப் படிக்கலாம். தமிழ் படிப்பதற்கு, நூல்களைப் படிப்பதற்கு ஆர்வமாக இருக்கிறது என்றால் வீட்டில் உட்கார்ந்து படிக்கலாம்?

**மாநில அரசாங்கம் அனுப்புகின்ற கோப்புகளை பார்வையிட்டு இது சட்டப்படி சரியானதா, அரசியல் அமைப்புக்கு உட்பட்டதா? இதில் நாம் கையெழுத்துப் போடலாமா என்பது தான் ஆளுநரின் வேலை! ஆனால் கோப்புகளில் கையெழுத்துப் போடாமல் இருக்கிறது. எனக்கு சந்தேகமாக இருக்கிறது. நான் வழக்கறிஞர்களிடம் ஆலோசனை செய்து கொண்டு இருக்கிறேன் என்று ஆளுநர் சொல்லிக்கொண்டு இருக்கிறார்.**

**ஆட்சிப் பணியில் இருந்த ஆளுநருக்கு அரசியல் அமைப்பு என்ன சொல்கிறது? என்றே தெரியாமல் இருக்கிறது. அரசியலமைப்பு பணிகளில், உயர் பொறுப்பில் இருக்கின்றவர் பொது வெளியில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் ஆளுநருக்குத் தெரியவில்லை.**

குறைந்தபட்சம் ஆளுநரிடம் நாகரிகமாவது இருக்கிறதா? என்றால் இல்லை? தமிழ் நாட்டில் வாழ்ந்து கொண்டு ,தமிழ் நாட்டு மக்களின் வரிப்பணத்தை சம்பளமாகப் பெற்றுக் கொண்டு மிகப்பெரிய வசதிகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற ஆளுநர், இங்கே உட்கார்ந்து கொண்டு சாதி ரீதியாக பிரிந்து இருக்கிறீர்கள். உங்களுக்கு சாதி உணர்வுதான் இருக்கு என்று, இந்த 70 ஆண்டு காலமாக சாதியை ஒழிப்பதற்கு தீவிரமான ஒரு அரசியல் நடந்து கொண்டிருக்கின்ற மாநிலத்தில் உட்கார்ந்து கொண்டு இப்படி பேசிக் கொண்டிருக்கிறார் ஆளுநர்.

இப்படி பேசுபவருடைய பேச்சில் உண்மையும் நாணயமும் இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. அதற்கு முன்னாள் தான் போய் பூணூல் பூசையை நடத்துகிறார். வேறு ஒரு சாதியினருடைய நிகழ்ச்சியில் போய் கலந்து கொள்கிறார். சாஸ்திரமும், சம்பிரதாயமும் இந்த நாட்டில் முக்கியமானது என்று பேசுகிறார். குழந்தைத் திருமணம் சரியானது என்று பேசுகிறார். ஆளுநருக்கு உண்மையிலேயே சாதி ஒழிப்பில் அக்கறை இருக்குமானால், சிதம்பரம் நடராஜர் கோயில் தீட்சிதர்களுக்காக குரல் கொடுத்தாரே, அதே மேடையில் தேவாரம் பாடுகின்ற தலித் பெண் ஒருவர் பாடினபோது அந்தப் பெண்ணை ஓங்கி கையால் அறைந்தாரே தீட்சிதர் அந்த தீட்சிதரைப் பார்த்து கேள்வி கேட்க ஆளுநருக்கு மனம் வந்ததா?

ஆளுநர் தலித் ஆதரவு என்று பேசுகிறார். தலித் மக்கள் மீது அக்கறை கொண்டவராக இருக்கிறேன் என்று பேசுகிறவருக்கு சிறிதாவது நாணயமும் நேர்மையும் இருக்கிறதா? அவரிடத்தில் ஒன்றுமே இல்லை.

இந்த நாட்டில் தெருக்களில், வீதிகளில் சென்று பாருங்கள், அங்கெல்லாம் இருக்கின்ற விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு எழுப்பப்பட்ட நினைவுச் சின்னங்களை யார் எழுப்பியது என்று ஆளுநர் கேட்டு தெரிந்து கொள்வது நல்லது.

ஒன்றிய அரசாங்கம் இதுவரை நடத்திக் கொண்டு இருக்கின்ற வரலாற்று ஆராய்ச்சிகளில் தென் இந்தியாவின் விடுதலைப் போராட்ட வரலாறு பற்றி என்ன எழுதி இருக்கிறார்கள், என்ன ஊக்கம் கொடுத்து இருக்கிறார்கள். ஒன்றுமே கொடுக்கவில்லை என்பதுதான் உண்மை.

**இப்போது வ.உ.சி. அவர்களின் 150 வது ஆண்டு விழா, தி.மு.க. ஆட்சி வந்த பிறகு, வ.உ.சி. அவர்களின் நான்கு தொகுதி நூல்களை வெளியிட்டார்கள். மாவட்டங்கள் தோறும் விழாக்களை நடத்தினார்கள். பாரதியின் கவிதை நூல்களை குறைந்த விலையில் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். வ.உ.சி. அவர்களின் நான்கு தொகுதி நூல்களை மிகவும் மலிவான விலையில் 500 ரூபாய்க்குள் வெளியிட்டு இருக்கிறார்கள்.**

**இப்படி விடுதலைப் போராட்ட வீரர்களின் சிந்தனைகள் எல்லாவற்றையும் மக்களிடம் கொண்டு போய் சேர்த்துக் கொண்டு இருக்கின்ற ஒரு மாநிலத்தில் அமர்ந்து கொண்டு, ஆளுநர் பச்சையாக பொய் பேசுகிறார். புரட்டு பேசிக்கொண்டிருக்கிறார். ஒரு அரசியல் அமைப்பு பணியில் இருக்கக் கூடியவரின் பணியா? என்று கேட்கக் கூடிய அவசியம் ஏற்படுகிறது.**

இந்த நாட்டில் அரசியல் அமைப்பு வரையும் போது ஆளுநர் பதவியே இல்லை. அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்ட போது இடையில் செறுகப்பட்டது. இந்தக் கூட்டாட்சி பற்றி உண்மையான இந்த ஆளுநர் பதவி ஒழிக்கப் படவேண்டும். இருக்கிறது. ராஜ மன்னார் குழு அறிக்கையில் ஆளுநர் பதவி ஒழிக்கப்படவேண்டும் என்று தான் இருக்கிறது.

குறைந்த பட்சம் ஆளுநர் நேரடியாக மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எப்படி குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறாரோ அதேபோல் ஆளுநர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஒரு மாநிலத்தில் பிரச்சினை செய்து கொண்டு இருந்தால் அரசியல் நடக்காது. கேரளாவில்,மேற்கு வங்காளத்தில் பிரச்சினை இப்படி எல்லா மாநிலங்களிலும் ஆளுநர்கள் பிரச்சினைகளாக இருக்கும் போது, இந்த மாற்றங்கள் விரைவில் வந்து சேரும். இப்போது நடந்து கொண்டு இருக்கின்ற ஆளுநருக்கும் அண்ணாமலைக்கும் யார் பா.ஜ.க.வின் தலைவர் என்ற போட்டி ஒரு ஆறு மாதத்தில் முடிவுக்கு வந்து, அநேகமாக ஆளுநர் பீகாருக்குப் போய் அங்கே இருக்கின்ற பா.ஜ.க. கட்சியில் அல்லது ஆர்.எஸ்.எஸ். ஜனசங்கத்தில் சேர்ந்து அவருடைய பணியைத் தொடர்வார் என்று நினைக்கிறேன்.

இவ்வாறு அரசியல் ஆய்வாளர் தமிழ் காமராசன் பேட்டியளித்தார்.

# ஏன் வழங்க வேண்டும் பெண்களுக்கு உரிமைத் தொகை?

## ‘மின்னம்பலம்’ இணையதளத்தில் மு.இராமனாதன் சிறப்புக் கட்டுரை!

**வீ**ட்டு வேலை பெண்களின் கடமை. கடமையைச் செய்தால் பலனை எதிர்பார்க்கக் கூடாது. ஆகவே இந்தியப் பெண்கள் வீட்டு வேலைகளுக்கு எந்த ஊதியமும் கோருவதில்லை.

நாளாந்தம் இந்தியப் பெண்கள் செய்யும் வீட்டு வேலைகளுக்கான மதிப்பு நமது உள்நாட்டு உற்பத்தியில் 7.5% ஆக இருக்கும் என்கிறது ஒரு மதிப்பீடு (SBI's Ecowrap report). இந்தியப் பெண்கள் ஒவ்வொரு நாளும் எந்தப் பிரதிபலனும் கருதாமல் 352 நிமிடங்கள் வீட்டு வேலை செய்கிறார்கள். இது இந்திய ஆண்கள் வீட்டு வேலைகளில் செலவழிக்கும் 52 நிமிடங்களைவிட சுமார் ஏழு மடங்கு அதிகம் என்கிறது இன்னொரு ஆய்வு (OECD data).




**இந்தியாவெங்கும் இதுதான் நிலை. இது பாலின சமத்துவத்திற்கு எதிரானது. இதை நேராக்க வேண்டுமெனில் பெண்கள் சக்தியுள்ளவர்களாக உருவாக வேண்டும். அதற்கான அடிவைப்புகளில் ஒன்றுதான் வீட்டு வேலை செய்யும் பெண்களுக்கு உரிமைத் தொகை வழங்குவது.**

**பல முற்போக்குத் திட்டங்களுக்குத் தொடக்கம் குறித்த தமிழகம்தான் இந்தத் திட்டத்தையும்**



**தொடங்கி வைத்திருக்கிறது. வீட்டு வேலை செய்யும் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை 2023 செப்டம்பர் 15ஆம் நாள் அறிஞர் அண்ணா பிறந்தநாள் அன்று காஞ்சிபுரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

**இதுவரை ஒரு கோடி ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்களுக்கு இரண்டு மாத உரிமைத் தொகை வழங்கப்பட்டுவிட்டது. தமிழகத்தின் நலத் திட்டங்களிலேயே இதுதான் ஆகப் பெரிய திட்டமாக இருக்கப் போகிறது.**

### சும்மா இருக்கும் பெண்கள்!

இந்தியப் பெண்கள் என்னவெல்லாம் செய்கிறார்



கள்? வீதி பெருக்கி, வீடு சுத்தமாக்கி, விளக்கேற்றி, பண்டமெலாம் சேர்த்து வைத்து, பால் வாங்கி, காய் வாங்கி, வேளைக்கோர் உணவு சமைத்து, பாத்திரம் கழுவி, துணிமணிகள் துவைத்து, பிள்ளைகளைப் பெற்று வளர்த்து, அவர்களுக்கு வாத்தியாய், வைத்தியனாய் மாறி, தற்கொண்டான் பேணி, வீட்டில் முதியோரைக் காத்து, எல்லாப் பிறப்பும் பிறந்து இளைக்கிறார்கள். எனினும், ‘யாராவது என்ன செய்கிறீர்கள்?’ என்று கேட்டால், ‘வீட்டில் சும்மாதான் இருக்கிறேன்’ என்று பதிலளிக்கிறார்கள்.

அவர்களது பிள்ளைகளிடம் ‘அம்மா என்ன செய்கிறார்?’ என்று கேட்டால் அவர்களும் அதையே தான் சொல்வார்கள். ‘அம்மா வீட்டில் சும்மா இருக்கிறார்.’ ஏனெனில், நமது பிள்ளைகளின் பாடப் புத்தகத்தில் அப்படித்தான் இருக்கிறது. குடும்பம் என்கிற பாடத்தில் வரையப்பட்டிருக்கும் சித்திரத்தில் அப்பா நாளிதழ் வாசித்துக் கொண்டிருப்பார்; அம்மா அகப்பையுடன் அடுப்பின் முன் நின்று கொண்டிருப்பார். குடும்பத்தில் பொருள் ஓங்கி வளர்ப்பவன் தந்தை; மற்றைக் கருமங்கள் செய்பவள்தான் அன்னை.

**நமது பெண்கள் செய்யும் வீட்டு வேலைகளுக்கு எந்த மதிப்புமில்லை. இந்தியாவில் பெண்கள் செய்யும் வேலைகளில் 84% இந்த ஊதியமற்ற வேலைகளின் கீழ்தான் வரும். மாறாக ஆண்கள் செய்யும் 80% வேலைகளுக்கு ஊதியம் கிடைத்துவிடுகிறது (Time Use Survey 2019, NSO). இதனால்தான் நம் சமூகத்தில் பெண்களின் கரம் தாழ்ந்திருக்கிறது. மகளிர்க்கு வழங்கப்படும் உரிமைத்தொகை இந்த நிலையை மாற்ற உதவும்.**

**மு.இராமனாதன்**
*எழுத்தாளர்,*
*பொறியாளர்*



2021 தேர்தலின் போது தி.மு.க. வழங்கிய பிரதான வாக்குறுதிகளுள் இந்த உரிமைத் தொகையும் ஒன்று. தேர்தல் பரப்புரைக் காலத்தில் இந்த வாக்குறுதியைச் சுற்றி நிறைய விவாதங்கள் நடந்தன.

இதைக் காங்கிரஸ் கட்சித் தலைவர் சசி தரூர் ஆதரித்தார். ‘இந்த ஊதியத்தால் பெண்களின் மதிப்பு உயரும், அவர்தம் சுதந்திரமும் அதிகரிக்கும்’ என்று அவர் ட்விட்டரில் எழுதினார்.

உரையாடல் நடப்பது அரசியல் வெளியல்லவா? நடிகை கங்கனா ரனாவத் எதிர்வினை ஆற்றினார். ‘குடும்பம் எனும் எங்கள் சிற்றரசுக்கு நாங்களே மகாராணி. எமக்கு யாரும் ஊதியம் வழங்கத் தேவையில்லை’ என்று சீறினார் கங்கனா. இந்த உரையாடலில் கலந்து கொண்ட சில பெண்கள் ‘எத்தனை குடும்பங்களில் பெண்கள் ராணிகளாக உலவுகிறார்கள்?’ என்று கேட்டார்கள். கங்கனா பதிலளித்ததாகத் தெரியவில்லை.

கங்கனா ஏன் பதற்றப்பட்டார்? அவர் பெண்ணாக இருக்கலாம். ஆனால் அவர் ஆணாதிக்க சமூகத்தின் குரலைத்தான் ஒலித்தார். பெண்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டால், அவர்கள் தலை நிமிர்ந்து நடக்கத் தொடங்கினால், அது இப்போதைய சமூகக் கட்டுமானத்தை அசைத்துப் பார்க்கும் என்கிற அச்சம்தான் கங்கனாவின் பதற்றத்துக்குக் காரணமாக இருக்க வேண்டும்.



### ஊதியமற்ற வேலை!

வீட்டு வேலைக்கு ஊதியம் என்கிற இந்தக் கோரிக்கை புதியதன்று. 1972ஆம் ஆண்டு செல்மா ஜேம்ஸ் என்பவரால் இத்தாலியில் இதற்காக ஓர் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. விரைவில் இது பல மேற்கு நாடுகளுக்கும் பரவியது. இந்தியாவில் 2012ஆம் ஆண்டு மன்மோகன் சிங் அரசில் சமூக நலத்துறை அமைச்சராக இருந்த கிருஷ்ணா திராத் வீட்டு வேலை செய்யும் மனைவிமார் ஊதியம் பெற வேண்டுமென்றார்; ஆனால் அதைக் கணவன்மார்தான் வழங்க வேண்டுமென்றார்.

இந்த ஆலோசனையில் இரண்டு பிரச்சினைகள் இருந்தன. முதலாவது, மனைவி இப்போதும் கை நீட்டிப் பெற்றுக்கொள்பவராகத்தான் இருப்பார்; இந்த நிலை மாறாது. இரண்டாவது, இதனால் குடும் த்தின் வருமானம் உயராது. கிருஷ்ணா திராத்தின் ஆலோசனை முன்னெடுக்கப்படாததில் வியப்பில்லை.



### வழக்கும் வழக்கமும்!

பொது வெளியில் இந்தப் பிரச்சினை மீண்டும் பேசப்படுவதற்கு ஜனவரி 2021இல் வெளியான உச்சநீதிமன்றத் தீர்ப்பொன்று காரணமாக அமைந்தது. அது வீட்டு வேலையையும் ஒரு தொழிலாகக் கருத வேண்டும் என்று கருத்துரைத்தது. வழக்கு இதுதான்.

2014ஆம் ஆண்டு டெல்லியில் நடந்த சாலை விபத்தில் ஸ்கூட்டரில் பயணித்த ஒரு தம்பதி உயிரிழந்தனர். கணவன் ஆசிரியர். மனைவி இல்லத்தரசி. இவர்களின் இரண்டு பிள்ளைகள் தாத்தாவின் பராமரிப்பில் இருந்தார்கள். இவர்கள் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து ரூ. 40.7 இலட்சம் இழப்பீடு கோரினார்கள்.

டெல்லி உயர்நீதிமன்றம் இதை ரூ. 22 இலட்சமாகக் குறைத்தது. இவர்கள் மேல்முறையீட்டுக்குப் போனார்கள். உச்சநீதிமன்றம் தம்பதிகளுக்கான இழப்பீட்டைக் கணக்கிடும்போது மனைவியின் வீட்டுப் பணிகளுக்கும் ஊதியத்தை கணக்கிட்டு, இழப்பீட்டை ரூ. 33.20 இலட்சமாக உயர்த்தி உத்தரவிட்டது. பெண்களின் வீட்டு வேலைக்குச் சமூக மதிப்பும் பொருளாதார மதிப்பும் உண்டு என்று கூறிய நீதியரசர்கள், பெண்கள் வீட்டுச் சிறைக்குள் அடைபடுவதற்கு நமது சமூகப் பண்பாட்டு வழக்கங்களே காரணமாக அமைகின்றன என்றும் குறிப்பிட்டனர்.



இந்த ‘வழக்கங்கள்’ காலங்காலமாக இருந்து வருகின்றன. அதனால்தான் பாண்டவர்களால் பாஞ்சாலியைப் பணயமாக வைத்துச் சூதாட முடிந்தது. ஆட்டத்தில் தோற்றதால் அவைக்கு இழுத்து வரப்பட்ட பாஞ்சாலி, அந்தப் புகழ் பெற்ற கேள்வியைக் கேட்டாள்: தன்னைப் பணயமாக வைத்துச் சூதாடித் தோற்றபின் என்னைப் பணயமாக வைக்கும் உரிமையை தருமனுக்கு யார் தந்தது?

பீஷ்மர் பாஞ்சாலிக்குப் பதில் சொன்னார்: “தன்னை அடிமையென விற்ற பின்னும் தருமன் நின்னை அடிமையெனக் கொள்வதற்கு நீதியுண்டு.” அது எப்படி நீதியாகும்? பீஷ்மர் சொல்கிறார்: “ஆடவருக்கு ஒப்பில்லை மாதர்; ஒருவன் தன் தாரத்தை விற்றிடலாம்; தானமென வேற்றுவர்க்குத் தந்திடலாம்.”

இந்த ‘நீதி’தான் பெண்களை நுகத்தடியாக அழுத்தி வருகிறது. இது நீதியன்று, அநீதி என்பது பீஷ்மருக்கும் தெரிகிறது. ஏனெனில் அவர் பாரதியின் பீஷ்மர். அவர் பாஞ்சாலியிடம் மனம் வருந்திச் சொல்கிறார்: “தீங்கு தடுக்கும் திறமிலேன்.”

புராண காலத்துப் பீஷ்மருக்குத் திறனில்லாமல் இருக்கலாம். ஆனால் நம் காலத்து அரசாங்கங்களுக்கு அந்தத் திறன் இருக்க வேண்டும். அவை இந்தத் தீங்கைத் தடுத்தாக வேண்டும். அதற்குப் பெண்களை சக்தியுள்ளவர்களாக மாற்ற வேண்டும். அதற்கு பெண்களுக்கு நிதிச் சுதந்திரம் இருக்க வேண்டும். அதாவது அவர்கள் உற்பத்தியில் பங்கெடுக்க வேண்டும். இந்த இடத்தில் பழமை விரும்பிகள் ஒரு கேள்வியை முன் வைப்பார்கள். கணவனும் மனைவியும் வேலைக்குப் போனால் வீட்டு வேலைகளை யார் பார்ப்பது? பதில்: இருவரும் பகிர்ந்துகொள்ள வேண்டும். பல வளர்ந்த சமூகங்களில் அப்படித்தான் நடக்கிறது.



### உற்பத்தியில் பெண்கள்!

**பெண்கள் ஊதியம் தரும் பணிகளில் ஈடுபட்டால் அவர்கள் வாழ்நிலை உயரும். கூடவே நாட்டின் பெருளாதாரமும் வளரும். இதனால் இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி 18% உயரும். அதாவது 770 பில்லியன் டாலர் (ரூ. 64 இலட்சம் கோடி) உயரும்** (McKinsey Power of Parity Report 2018).

**பொருளாதார வளர்ச்சியை யார் வேண்டாம் என்பார்கள்? 2027இல் இந்தியாவை ஐந்து டிரில்லியன் டாலர் (ரூ.416 இலட்சம் கோடி) பொருளாதாரமாக உயர்த்துவதை தனது இலக்காக முன் வைத்திருக்கிறது ஒன்றிய அரசு. அதற்கான பல திட்டங்களையும் முன் வைத்திருக்கிறது. அந்தப் பட்டியலில் பெண்களை உற்பத்தியில் ஈடுபடுத்தும் எந்தத் திட்டமும் காணக் கிடைக்க வில்லை. பெண்கள் உற்பத்தியில் பங்கெடுப்பதைத் தரப்படுத்தும் 131 நாடுகள் அடங்கிய பட்டியலில் இந்தியா 120 ஆவது இடத்தில் இருக்கிறது** (World Bank, 2018).

**மக்கள் தொகையில் சரிசமமாக இருக்கும் மனித வளத்தை விலக்கி வைத்துவிட்டு ஒரு நாட்டின் பொருளாதாரம் எப்படி வளர முடியும்?**

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ11.97 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி மைய கட்டிடத்தினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் பள்ளி கல்வித்துறை சார்பில் வழங்கப்படும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டியை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வழங்கினார். உடன் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், விஜயகுமார், தரங்கம்பாடி பேரூர் கழகச் செயலாளர் முத்துராஜா, தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணாசங்கரிகுமரவேல், துணைத் தலைவர் பொன்ராஜேந்திரன், பேரூர் கழக அவைத்தலைவர் கந்தசாமி மற்றும் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2023) சென்னையில், உடல்நலக்குறைவால் மறைவெய்திய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் முனைவர் பி.செந்தில்குமார், மகன் அஷ்வின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### திருப்பத்தூர் தொகுதியில்

# 5000 தொழிலாளர்களுக்கு சீருடைகள்!

## அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் வழங்கினார்!

சிவகங்கை. அக்.26-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினரா கவும் அமைச்சராகவும் கேஆர். பெரியகருப்பன் உள்ளார். இவர் தனது சொந்த நிதியி லிருந்து திருப்பத்தூர் தொகு திக்குட் பட்ட சிங்கம்புணரி, பள்ளத்தூர், குன்றக்குடி, க,ல்லல், எஸ். புதூர் கீழ சேவல்பட்டி, பிள்ளையார் பட்டி, திருப்பத்தூர் நெற் குப்பை ஆகிய ஒன்றியங்க ளில் உள்ள ஆட்டோ, வேன், டிராக்டர் ஓட்டும் தொழி லாளர்களுக்கு கடந்த 15ஆண்டுகளாக சீருடை களை ஆயுதபூஜை தோறும் வழங்கிவருகிறார். இந்த ஆண்டு 16வது ஆண்டு ஆயுத பூஜையை முன்னிட்டு நேற்று முன்தினம் திருப்பத்தூரில் பஸ் நிலை யம், அண்ணா சிலை, நான்கு ரோடு ஆகிய சந்திப்பில் உள்ள மற்றும் அனைத்து பகுதிகளுக்கும் உள்ள தொழிலாளர்களுக்கு நேரடி யாகச் சென்று சீருடைகளை அமைச்சர் கேஆர்.

பெரிய கருப்பன் வழங்கி வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் த.சேங்கை மாறன், ஒன்றிய செயலாளர்கள் எஸ்.சண்மு கவடிவேலு கே.பாலசுப்பிர மணியன், விராமதி. மாணிக் கம், பேரூர்கழகசெயலாளர் ஆர்.கார்த்திகேயன், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப் பாளர் என்.எம்.சாக்ளா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்கு மார், நிர்வாகிகள் ராம.ரவி, பொருளாளர் ஏ.எம்.கண் ணன், ஷாஜகான், உதயம் சண்முகம், ஒன்றிய துணை செயலாளர் முத்துகுமார், புதூர் கண்ணன், இளைஞ ரணி மனோகரன், பேரூ ராட்சி தலைவர் திருமதி கோகிலராணி. நாராயணன், துணைத் தலைவர் கான்முக மது. மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப் பாளர் கே.எஸ்.நாராயணன் பிளாசா சேகர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இதேபோல் சிங்கம்புணரி யில் மாவட்ட அவைத்தலை வர் அ.கணேசன் தலைமை யில் பேரூர் கழகச் செயலா ளர் கதிர்வேல் பொதுக்குழு உறுப்பினர் சோமசுந்தரம் ஒன்றிய செயலாளர் பூமணி, கே. பாலசுப்ரமணியன் பேரூ ராட்சி மன்ற தலைவர் அம் பலமுத்து துணை தலைவர் செந்தில், கவுன்சிலர் ஷாஜ கான் அவை தலைவர் சிவக் குமார், இளங்கோ, மனோக ரன் புகழேந்தி , சிவபுரி சேகர் குடோண்மணி மற் றும் நிர்வாகிகள் சீருடை களை வழங்கினார்கள்.எஸ். புதூர் ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் பெ. செல்வராஜ் தலைமையில் நிர்வாகிகள் சீருடைகளை வழங்கினார் கள். கல்லலில் கிழக்கு ஒன் றிய செயலாளர் நா.நெடுஞ் செழியன் மற்றும் நிர்வாகிகள் சீருடைகளை வழங்கினார்கள்.

பிள்ளையார்பட்டியில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வெள்ளைச்சாமி மற்றும் நிர்வாகிகள் சீருடை களை வழங்கினார்கள். குன் றக்குடியில் கல்லல் மேற்கு ஒன்றிய செயலாளர் குன்னக் குடி சுப்பிரமணியன் வழங்கி னார். இந்த நிகழ்ச்சியில் ஒன் றியகவுன். சிலர் மருது பாண்டியன், இளைஞரணி ரமேஸ் மணிமுத்து மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண் டனர். பள்ளத்தூர் கானாடு காத் தான்,சூரக்குடி ஆத் தங்குடி சிறுவயல் மற்றும் பல்வேறு கிராமங் களில்பொதுக்குழு உறுப்பி னர் பள்ளத்தூர் கே. எஸ். ரவி. தலைமையில் ஒன்றிய செயலாளர்கள் சுப.சின்ன துரை,கே.ஆர். ஆனந்த், ராசு, அசோக், சூரக்குடி பழ னியப்பன், பேரூராட்சி தலைவர் திருமதி ராதிகா உட்பட நிர்வாகிகள் சீருடை களை வழங்கினார்கள். நெற் குப்பையில் பேரூராட்சி மன்றத் தலைவர் கே.பி.எஸ். பழனியப்பன் மற்றும் நிர்வா கிகள் வழங்கினார்கள்.திருப் பத்தூர் தொகுதி முழு வதிலும் 5000 தொழிலாளர் களுக்கு சீருடைகள் வழங்கப் பட்டது.

### பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஜெயந்திக்கு மரியாதை செலுத்த வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு இராமநாதபுரத்தில் சிறப்பான வரவேற்பு அளித்திடுவோம்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் -காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் பங்கேற்பு!

இராமநாதபுரம்,அக்.26-

பசும்பொன் முத்து ராம லிங்கத்தேவர் ஜெயந்திக்கு மரியாதை செலுத்த வருகை தரும் தமிழ்நாடு முதல்வரை வரவேற்றிட 20 ஆயிரம் பேர் இரு வண்ண கொடியுடன் வரவேற்பு அளிக்க வேண் டும் என இராமநாதபுரத்தில் மாவட்ட தி.மு.க. செயல்வீ ரர்கள் கூட்டத்தில் தீர்மா னம் நிறைவேற்றப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க.சார்பில் இராமநாத புரத்தில் செயல்வீரர்கள் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் வ.சத்தியமூர்த்தி, தலைமையில் நடைபெற் றது. இதில், மாவட்ட கழக செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம். எல்.ஏ, பிற்படுத்தப்பட் டோர் நலம் மற்றும்,கிராம தொழில்கள் வாரிய துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், கலந்துகொண் டனர். வரும் 30 ஆம் தேதி பசும்பொன் கிராமத்தில் பசும்பொன் முத்துராம லிங் கத்தேவர் ஜெயந்தி விழா நடைபெறுகிறது. இந்த விழாவில் தமிழ்நாடு முதல் வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மரியாதை செலுத்த வருகை தர உள்ளார். முதல்வரை வரவேற்க 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வர்கள் கையில் இரு வண் ணக் கொடியுடன் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண் டும். சேலத்தில் நடைபெ றும் தி.மு.க. இளைஞரணி மாநாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து பெருமளவிலான நிர்வாகி கள் மற்றும் தொண்டர்கள் கலந்துகொள்ள வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த கூட்டத்தில், பரமக் குடி சட்டப்பேரவை உறுப் பினர் செ.முருகேசன், மாநில இளைஞரணி துணைச்செய லாளர் இன்பா ஏ.என்.ரகு, முன்னாள் அமைச்சர் சுந்தர ராஜன், மாநில தீர்மானக்குழு துணைத்தலைவர் சுப.த.திவாகரன்,முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் முருகவேல், மற்றும் மிஷா அகமது தம்பி,மாவட்டத் துணைச் செயலாளர்கள் கே. கருப்பையா, சுஜாதா,மாநில, மாவட்ட, நகர்,பேரூர் கழக நிர்வாகிகள் கலந்துகொண் டனர்.மேலும் இந்த கூட்டத் தில் கீழ்க்கண்ட தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டன.

நாட்டின் விடுதலைக்காக முதன் முதலில் முழக்கமிட்டு போரிட்ட மாமன்னர்கள் மருது பாண்டியர்களின் குரு பூஜை விழாவிற்கு இராமநா தபுரம் மாவட்ட கழகத்தின் சார்பில் பெருந்திரளாக கலந்து கொண்டு வீரவணக்கம் செய்திக் கேட்டுக் கொள் ளும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்படுகிறது.

பசும்பொன். முத்துராம லிங்கத்தேவர் அவர்களின் ஜெயந்தி விழாவை முன் னிட்டு வருகின்ற 30.10.2023 அன்று கமுதி பசும்பொன் வருகை தர இருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் கழ கத் தலைவர் அவர்களுக்கு இராமநாதபுரம் மாவட்ட கழகத்தின் சார்பாக மிகச் சிறப்பான வரவேற்பு அளித் திடும் வகையில் இராமநாத புரம் மாவட்ட கழக நிர்வா கிகள் உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டும்.

இராமநாதபுரம் மாவட் டம் திருவடானை, பரமக் குடி, இராமநாதபுரம் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதி களைச் சேர்ந்த கழக நிர்வாகிகள் அனைவரும் 30.10.2023 அன்று காலை 7.40 மணியளவில் இராமநா தபுரம் மாவட்ட எல்லை யான பார்த்திபனூரில் தமிழக முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு அளிக்கவிருக்கின்ற வரவேற் பில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்படு கிறது.

இராமநாதபுரம் மாவட் டம் முதுகுளத்தூர் சட்ட மன்ற தொகுதிக்கு உட் பட்ட கமுதி வடக்கு தெற்கு மத்திய ஒன்றிய கழகங்கள், அபிராமம் பேரூர், கமுதி பேரூர் கழகங்கள், பரமக் குடி மேற்கு ஒன்றிய கழகம்,

முதுகுளத்தூர் ஒன்றிய கழகங்கள் கடலாடி ஒன்றிய கழகங்கள், சாயல்குடி ஒன் றிய கழகங்கள் ஆகியவற்றி லிருந்து வருகை தர இருக் கின்ற கழகத் தொண்டர்கள் அனைவரும் அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற பேருந்து களை அவரவர் எல்லையில் இருந்து புறப்பட்டு பசும் பொன் கிராமத்திற்கு 8 மணிக்குள் வருகை தரும் வகையில் சம்பந்தப்பட்ட, நிர்வாகிகள் உரிய ஏற்பாடு களை செய்திட கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்படு கிறது.தேவர் திருமகனாரின் ஜெயந்தி விழாவிற்கு வாடகை வாகனங்கள் அனு மதிக்கப்படாத காரணத்தி னால் கழக நிர்வாகிகள் முன் கூட்டியே சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களிடம் உரிய ஆவணங்களை சமர்ப் பித்து தங்களது தனியார் வாகனங்களுக்கு வாகன அனுமதியை பெற்றிட அந் தந்த பகுதிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் உரிய முன்னேற் பாடுகளை விரைந்து செய் திட வேண்டும் என கேட்டுக் கொள்ளும் நீர்மானம் ஒரு மனதாகநிறைவேற்றப்படுகிறது.

தேவர் திருமகனாரின் ஜெயந்தி விழாவை முன் னிட்டு தமிழ்நாடு முதனை மச்சர் அவர்களை வரவேற் கும் விதமாக பசும்பொன் நுழைவாயில் இருந்து தேவர் நினைவிடம் வரை வர வேற்பு அளிக்கின்ற வகை யில் கொடி கட்டுதல், வாழைமரம் நடுதல் உள் ளிட்ட பணிகளை செய்வ தற்கு தனித்தனியாக மாவட் டக் கழகம் அமைக்கப்படும் குழுக்கள் உடனடியாக பணி களை தொடங்குமாறு கேட் டுக் கொள்ளும் தீர்மானம் ஒரு மனதாக நிறை வேற்றப் படுகிறது.

இளைஞர் அணி மாநாட் டில் கலந்து கொள்ள இருக் கின்ற இளைஞர்களின் விவ ரம் அடங்கிய பட்டியல் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் இளைஞர் அணியினர் மூலம் விரைந்து ஒப்படைத்திட. கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்படு கிறது.

மேலும் இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, நகர, ஒன் றிய, கிளைக் கழக பொறுப் பாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### ஊரக வளர்ச்சித் துறையின் முதன்மைச் செயலாளர்

# முனைவர் பி.செந்தில்குமார் புதல்வர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.26-

தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் முதன்மைச் செயலாளர் முனைவர் பி. செந்தில்குமாரின் புதல்வர் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் முதன்மைச் செயலாளர் முனைவர் பி.செந்தில்குமார் அவர்களின் மகன் அஷ்வின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மறைவெய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.**

**இளம் வயது மகனைப் பிரிந்து வாடும் அவருக்கும், அவரது குடும்பத்தினர்க்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### வட்டு எறிதல் போட்டியில்

# வெண்கலம் வென்ற முத்துராஜாவுக்கு பாராட்டுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலை தளத்தில் வாழ்த்து!

சென்னை, அக்.26-

ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் வட்டு எறிதலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த முத்து ராஜா வெண்கலபதக்கம் வென்றதற்கு பாராட்டுகள் என வும், அடுத்தடுத்த போட்டிகளில் தங்கம் வெல்ல வாழ்த்துகி றேன் என்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித் துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வரு மாறு:-

**Asian Para Games 2022இல் இந்திய வீரர்கள் தொடர்ந்து பதக்கங்களைக் குவித்து வருவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.**

**அந்த வரிசையில், வட்டு எறிதல் போட்டியில் வெண் கலம் வென்றுள்ள நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த முத்துராஜா அவர்களுக்கு எனது பாராட்டுகள். முத்து ராஜா மென்மேலும் சாதித்து அடுத்தடுத்த போட்டிகளில் தங்கம் வெல்ல வாழ்த்துகி றேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தி யுள்ளார்.

### விதிகளை மீறும் மோடி அரசு

# அரசியல் விஷயங்களில் அதிகாரிகளின் தலையீடு கூடாது!

## "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, அக்.26-

ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ்., இராணுவ அதிகாரிகளை பயன்படுத்தி அரசியல் செய்ய நினைக்கும் மோடியின் செயல் கண்டனத்திற்குரியது மற்றும் அதிகாரிகள் அரசியல் செய்யக்கூடாது என்று 'தினகரன்' நாளேடு 25.10.2023 தேதிய இதழில் தலையங்கம் எழுதி தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளது.

அது வருமாறு:-

நாடாளுமன்ற தேர்தல் நெருங்கி விட்டது. அடுத்த ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்க ளில் தேர்தல் நடைமுறைகள் தொடங்கி விடும். தேர்தலை நடத்துவதற்குத்தான் ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ்., அதிகாரிகள் பயன்படுத்தப்படுவார்கள். ஆனால் மோடி ஆட்சியை விளம்பரப்படுத்த ஐஏஎஸ் அதி காரிகள் மற்றும் ராணுவ வீரர்க ளுக்கு உத்தரவிட்டு வெளியான ஒன்றிய அரசின் சுற்றறிக்கை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது. கடந்த 9 ஆண்டுக ளில் மோடி அரசின் சாதனை களை மக்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில்,மாவட் டந்தோறும் ஐ.ஏ.எஸ், அதிகா ரிகளை நியமிக்க வேண்டும் என்று ஒன்றிய நிதி அமைச்சகம் உத்தர விட்டுள்ளது. இதே போல வருட விடுமு றைக்கு தங்கள் ஊருக்கு செல்லும் ராணுவ வீரர்கள் அர சின் திட்டங்களை பிர பலப்படுத் துவதற்கு உதவும்



வகையில், ராணுவ தூதர்களாக செயல்பட வேண்டும் என பாது காப்பு அமைச்சகம் கடந்த 9ம் தேதி உத்தரவிட்டுள்ளது. இந்த 2 உத்தரவுகளும் அரசியல் அரங்கில் பெரும் அதிர்வலை களை ஏற்படுத்தி இருக்கிறது. ஏனெனில் மோடி அரசின் 9 ஆண்டு சாதனையை விளக்குவ தற்கு நாடு முழுவதும் 765 மாவட்டங்களில் சிறப்பு அதி காரிகளை நியமிக்க நிதி அமைச் சகம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவை காங்கிரஸ் கடுமையாக எதிர்த்து உள்ளது. ஐ.ஏ.எஸ், அதிகாரி களை பா.ஜ கட்சியின் சாதனை விளக்க பணிகளுக்கு அனுப்பி வைக்க கூடாது. இது சிவில் சர்வீஸ் விதி கள் 1964 பிரிவை மீறுவதாகும். குறிப்பிட்ட அந்த விதியின்படி அரசியல் விஷயங்களில் அதிகா ரிகள் தலையிடக்கூ டாது. அரசின் திட் டங்கள் பற்றி அதிகாரிகள் விழிப் புணர்வு ஏற்படுத்த லாம். ஆனால் அர சின் திட்ட ங்களை கொண்டாடுவது மற்றும் அதனை காட்சிப்படுத்துவது கட்சி தொண்டர்களின் பணி யாகும். இந்த பணிக்கு அதிகா ரிகளை அனுப்பினால் அடுத்த 6 மாதங்களுக்கு அரசு இயந்தி ரம் முடங்கி விடும். ஜனநாயகத் தையும்,அரசியல் சட்டத்தை யும் பாதுகாக்க இந்த உத்தரவு களை அரசு உடனே வாபஸ் பெற வேண்டும் என்ற கோரிக்கை காங்கிரஸ் தலைவர் கார்கே சார்பில் எழுப்பப் பட்டுள்ளது.

ஆனால் இதை எல்லாம் மோடி அரசு காது கொடுத்து கேட்க தயாராக இல்லை. ஒன் றிய பா.ஜ அரசால் அறிவிக்கப் பட்ட நலத்திட்டங்கள் முழு மையாக மக்களை சென்று சேர்ந்துள்ளதா என்பதை 6 மாதங்களுக்குள் தெரிவிக்க பிர தமர் மோடி காலக்கெடு நிர்ண யித்துள்ளார். இதை அறிய, 'வி கஷித் பாரத் சங்கல்ப் யாத்ரா' என்ற மெகா இயக்கம் தொடங் கப்பட்டு, அதற்காக பிரத்யேக மாக ரதங்கள் உருவாக்கப் பட்டு, அவை நாடு முழுவதும் உள்ள 2.7 லட்சம் பஞ்சாயத்து களுக்கு யாத்திரையாக செல் லும் வகையில் திட்டமிடப்பட் டுள்ளது. இதற்காகத்தான் நாட் டில் உள்ள 765 மாவட்டங்க ளுக்கும் தனி ஐ.ஏ.எஸ், அதிகா ரிகள் நியமிக்கப்பட உள்ளனர். நமது ஜனநாயகம், அரசியல மைப்பு சட்டத்தை பாதுகாக் கும் வகையில், இந்த உத்தரவு களை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்ற குரல் எழுப்பப்பட்டு உள்ளது.

பிரதமர் மோடி தலைமையி லான ஒன்றிய பா.ஜ அரசு அமைந்த பிறகு சி.பி.ஐ, அம லாக்கத்துறை, வருமானவரித் துறை, தேர்தல் கமிஷன் உள் ளிட்டவை பா.ஜவின் கைப் பாவையாக மாறிவிட்டன என்ற புகாருக்கு மத்தியில் இப் போது ஐ.ஏ.எஸ், அதிகாரிக ளையும் தேர்தல் பிரசார பணி போன்ற யாத்திரை பணியில் ஈடுபடுத்துவது பெரும் தவறான முடிவு.

இவ்வாறு "தினகரன்" நாளேட்டில் தனது கண்ட னத்தை பதிவிட்டுள்ளது.

### தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில்

# கனிமொழி கருணாநிதி எம்.பி. - அமைச்சர் பி.கீதாஜீவன் நிகழ்ச்சிகள்!

தூத்துக்குடி, அக்.26-

தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக் குடி நாடாளுமன்றஉறுப் பினரு மான கனிமொழி கருணாநிதி சமூகநலன் (ம) மக ளிர் உரிமைத்துறை அமைச்ச ரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளரு மான கீதா ஜீவன் ஆகியோர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி நிரல் விபரம் வருமாறு:-

நேரம், நிகழ்ச்சி, நடைபெ றும், ஒன்றியத்தின் பெயர், நிகழ்ச்சி விபரம்:-

28.10.2023 சனிக்கிழமை, மாலை 4 மணி, சிவஞான புரம்,விளாத்திகுளம்மேற்கு, மக் கள் களம் நிகழ்ச்சி மூலம்பொது மக்களின்குறை கேட்டல்.

மாலை 5 மணி, பொம்மை யாபுரம், சக்கம்மாள்புரம் ஊராட்சி, விளாத்தி குளம் மேற்கு, மக்கள் களம்நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.


மாலை 6 மணி-நமச்சிவாய புரம்-விளாத்திகுளம் மேற்கு- மக்கள் களம் நிகழ்ச்சி மூலம் பொது மக்களின்குறை கேட்டல்.

இரவு7 மணி-அருங்குளம் விளாத்திகுளம் மேற்கு-மக்கள் களம் நிகழ்ச்சி மூலம்பொது மக்க ளின்குறை கேட்டல்.

இரவு-8 மணி-வெள்ளை யம்மாள்புரம் - விளாத்தி குளம் மேற்கு-மக்கள் களம்நிகழ்ச்சி மூலம்-பொது மக்களின்குறை கேட்டல்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அண்ணல் தங்கோ
### அக்டோபர் 26 (2015)



**இளம்வயதிலேயே திராவிடர் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**சைதை பகுதியில் வட்டச் செயலாளர் பொறுப்பேற்று அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**நெருக்கடி கால மிசாவில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.


26-10-2023 இன்று
கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கிடவும்,
மாவட்ட இளைஞர் அணி பயிற்சி பாசறை கூட்டத்தில்
கலந்து கொண்டு சிறப்பிக்க விருதுநகர் வருகை தரும்
மாண்புமிகு.
உதயநிதி ஸ்டாலின் அவர்களே
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்
வருக! வருக!!
அன்புடன் A.R.R.சீனிவாசன் M.L.A.,
விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர்

41

# இடம் பொருள் கலைஞர்

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி!**






# இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி

## வீடுகளுக்குள் உலகைக் கொண்டு வந்த சமத்துவம்!

அது ஒரு காலம். 90-களின் இறுதி வரை, மத்திய தர, மேல் மத்திய தர வீடுகளில் மட்டுமே தொலைக்காட்சிப் பெட்டிகள் இருந்தன. அவையும்கூட கருப்பு வெள்ளை டி.வி.கள்தான். செல்வந்தர் வீடுகளில் கலர் டி.வி.க்கள் நுழைந்த பிறகே, சிறுக சிறுக மத்திய, மேல் மத்திய தர வீடுகளில் சாதாரண டி.வி.கள் வியாபிக்கத் தொடங்கின.

அடித்தட்டு, விளிம்புநிலைச் சமூக மக்களின் வீட்டு நிலைமை குறித்து, கேட்கவே வேண்டாம். சாதி வேற்றுமைகள் நிறைந்திருந்த அன்றெல்லாம், கிராமங்களில் இருந்த பொதுத் தொலைக்காட்சி அறைகள் மட்டுமே அவர்களுக்கு ஒரே ஆறுதலாக இருந்தன. அதிலும் கூட, ஞாயிற்றுக்கிழமை படம், கிரிக்கெட் போட்டிகள் ஆகியவற்றை மட்டுமே காண முடியும். அதற்கும் கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு கால்கடுக்க நிற்க வேண்டும்.

ஓரளவு பரந்த மனம் கொண்ட, டி.வி. வைத்துள்ள வீட்டுக்காரர்கள் அந்த மக்களில் சிலரை, கதவுக்கு வெளியில் இருந்து **'ஒளியும் ஒலியும்'**, **'வயலும் வாழ்வும்'** போன்ற நிகழ்ச்சிகளைப் பார்க்க அனுமதித்தார்கள்.

> **கலையை விளக்குகின்ற பெட்டி. இலக்கியத்தை விளக்குகின்ற பெட்டி. கருத்துகளை எடுத்துச் சொல்லுகின்ற பெட்டி. இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, எண்ணச் சோலையாக அமைகின்ற பெட்டி!**

### தேர்தல் அறிக்கையின் நாயகன்

இவ்வாறு ஜன்னல் கம்பிகளூடேயும், நிலைக்கதவுகளுக்கு அப்பால் வெளியே நின்றும் கூனிக் குறுகி, சுயமரியாதை இழந்து டி.வி. பார்க்கப்பட்டு வந்த நிலைமையை, 2006-இல் ஒட்டுமொத்தமாக மாற்றினார் முத்தமிழறிஞர் கலைஞர். அந்த ஆண்டு நடைபெற்ற **சட்டமன்றத் தேர்தலின் நாயகன் என்று தி.மு.கழகத்தின் 'இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி'** என்ற வாக்குறுதியைச் சொல்லலாம்.

ஆண்களுக்காவது அடுத்தவர் வீடுகளில், பொதுத் தொலைக்காட்சிப் பெட்டி அறைகளில் கூட்டத்தோடு கூட்டமாக இருந்து பார்க்கிற வசதி இருந்தது. ஆனால், பெண்களுக்கு அதுவும் இல்லை. அதனால்தான் 2006-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில், **'மகளிர் மனம் மகிழ்ந்து பொது அறிவு பெற்றிட, வீடு தோறும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி'** என்ற வாக்குறுதி ஏழை, எளிய தாய்மார்களை முன்னிறுத்தி அளிக்கப்பட்டது. கழகஅரசு அமைந்தவுடன், அந்தத் திட்டம், தகவல் தொழில்நுட்பத் துறையின் மூலமாக செயல்படுத்தப் பட்டது.

### வெளிப்படையான கொள்முதலுக்குக் குழு

இந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகளை முறையாகக் கொள்முதல் செய்யவும், குறை நேராமல் விநியோகிக்கவும், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. முதலமைச்சர் தலைமையிலான இந்தக் குழுவில் தி.மு.க. சார்பாக அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் இன்றைய கழகத் தலைவர், காங்கிரஸ் சார்பில் டி.சுதர்சனம், பா.ம.க. சார்பில் கோ.க.மணி, சி.பி.எம். சார்பில் சி.கோவிந்தசாமி, சி.பி.ஐ. சார்பில் வை.சிவபுண்ணியம், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் கு.செல்வம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் எச்.அப்துல் பாசித், புரட்சி பாரதம் சார்பில் பூவை மு.ஜெகன் மூர்த்தி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இந்தக் குழு 2006-ஆம் ஆண்டு ஜூன் 27 அன்று கூடி, இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்க முதற்கட்டமாக 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை, வெளிப்படையான தேசிய ஒப்பந்தப்புள்ளி முறையில் கொள்முதல் செய்வது என்றும், அடுத்த கட்டமாக வெளிப்படையான சர்வதேச ஒப்பந்தப்புள்ளி முறையில் கொள்முதல் செய்வது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

### சமத்துவபுரத்தில் தொடங்கப்பட்ட திட்டம்

தொடர்ந்து, செப்டம்பர் 15 அன்று பேரறிஞரின் பிறந்த நாள் மற்றும் செப்டம்பர் 17 அன்று தந்தை பெரியார் பிறந்த நாள் ஆகிய விழாக்களை யொட்டி, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் செப்டம்பர் மாதம் முதல் வாரத்திலேயே தொடங்கப்பட்டு, தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று அரசு அறிவித்தது. முதற்கட்டமாக வழங்கப்படவுள்ள 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்குச் செலவாகும் தொகை தவிர, அந்த நிதியாண்டுக்கு மட்டும் 750 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாக, கழக அரசு பொறுப்பேற்ற பிறகு தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், முதற்கட்டமாக, பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் உள்ள குடும்பத்தினருக்கும், அதுவரையில் சமத்துவபுரம் அமைக்கப்படாத நீலகிரி மாவட்டத்தில், அங்குள்ள மலைவாழ் பழங்குடிக் குடும்பங்களுக்கும், சென்னை மாநகரில் வடசென்னையில் ஒன்றும், தென் சென்னையில் ஒன்றுமாக, குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் உள்ள குடும்பங்களுக்கும், மாநிலத்திலுள்ள அனைத்து மறுவாழ்வு இல்லங்களில் வாழ்வோருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் என்று முதலமைச்சர் தலைமையிலான குழு முடிவு செய்தது.

### எண்ணத்தை வளமாக்கிய பெட்டி

இந்தத் திட்டத்தை, காஞ்சிபுரம் மாவட்டம், **கரசங்கால் துண்டல்கழனி பெரியார் நினைவு சமத்துவபுரத்தில்** தொடங்கி வைத்த கலைஞர் அந்த விழாவில் இவ்வாறு உரையாற்றினார்:

"சில பேர் 'இதற்கு நிதி எங்கே? நிதி எங்கே?' என்று கேட்டார்கள். அந்த நிதியை எவ்வளவு ஒதுக்கியிருக்கிறோம் என்று நிதிநிலை அறிக்கையில் தொடக்கத்திலேயே எடுத்துக் காட்டியிருக்கிறோம். இப்படி இன்றைக்குத் தொடங்கி, நாளைய தினம் வழங்க இருக்கின்ற தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி 9 கோடி ரூபாய்தான். 9 கோடி ரூபாய்க்கு ஏறத்தாழ 30 ஆயிரம் பெட்டிகளை வழங்க முடிகிறது. என்றால், 750 கோடி ரூபாய்க்கு 25 இலட்சம் பெட்டிகள் வழங்க முடியும். வழங்கத்தான் போகிறோம்.

வேறிடத்திலே சில பெட்டிகள் பழைய காலத்திலே வழங்கப்பட்டதுண்டு. அந்தப் பெட்டி அல்ல நாம் வழங்குகின்ற பெட்டி. இது உலகச் செய்திகளையெல்லாம் அறிவிக்கின்ற பெட்டி. கலையை விளக்குகின்ற பெட்டி. இலக்கியத்தை விளக்குகின்ற பெட்டி. கருத்துகளை எடுத்துச் சொல்லுகின்ற பெட்டி. இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, எண்ணச் சோலையாக அமைகின்ற பெட்டி" என்றார்.

வீடுகளுக்குள் கலைஞர் வழங்கிய இலவச வண்ணத் தொலைக்காட்சிகள் வந்த பிறகு, அதைப் பயன்படுத்தும் பயனாளர்களுக்கு 'டி.வி. இருக்கிற வீடு' என சமூகத்தில் ஓர் அந்தஸ்து கிடைத்தது. இன்னொருவரின் வீட்டுக்குச் சென்று படம் பார்க்கத் தேவையில்லாமல் செய்து, அவர்களின் சுயமரியாதையைக் காப்பாற்றியது. செய்தி, சினிமா, கேளிக்கை நிகழ்ச்சிகள் எனப் பலவற்றையும் கண்டு களித்துத் தங்களின் பார்வையை விசாலமாக்கிக் கொண்டவர்கள் பலர். தொலைக்காட்சி மூலம் கல்வி, வேலை வாய்ப்பு, அரசுத் திட்டங்கள், பொதுச் சுகாதாரம் எனப் பல விஷயங்கள் குறித்து விழிப்புணர்வு பெற்று, அவற்றின் பின்னால் ஓடி, பலன் பெற்றவர்கள் பல்லாயிரக்கணக்கான பேர்கள் உண்டு. இப்படி, அந்தத் தொலைக்காட்சி பெட்டியினால், கிடைத்த பலன்களைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

கலைஞர் வழங்கிய தொலைக்காட்சிகள் எல்லாம் இன்றும் பல வீடுகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதே அவரது தொலைநோக்குப் பார்வைக்கு கிடைத்த வெற்றி எனலாம்!

**...வலம் வருவோம்**

> இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட பிறகு, ஐந்து கட்டங்களில், மொத்தம் 3,687 கோடியே 32 இலட்சத்து 94 ஆயிரத்து 378 ரூபாய்ச் செலவில், 1 கோடியே 62 இலட்சத்து 80 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டன. அவற்றுள், 2011 ஜனவரி 31 வரை 1 கோடியே 52 இலட்சத்து 59 ஆயிரத்து 526 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. எஞ்சிய தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கும் பணிகள் 2011 சட்டமன்றத் தேர்தல் விதிமுறைகள் நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து நிறுத்தி வைக்கப்பட்டு, அரசு அலுவலகங்களில் இருப்பு வைக்கப்பட்டன. ஆட்சி மாறிய பிறகு, அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகளை மக்களுக்கு வழங்காமல் பாழ்படுத்தப்பட்டது உலகு அறியும்.

## வைக்கம்: நாயக்கர் முதல் நாயகர் வரை!



தேசிய அளவில் முக்கிய நாடக ஆளுமையாக உள்ளவர் பேராசிரியர் மு.இராமசுவாமி. இவரது **'நிஜ நாடக இயக்கம்'** மூலம் ஏற்கெனவே நிகழ்த்தப்பட்ட 'கலகக்காரர் தோழர் பெரியார்' என்கிற இரண்டு நாடகங்கள், பெரியார் மீது முன்வைக்கப்பட்ட அவதூறுகளுக்கு பதில் சொல்பவையாக அமைந்தவை. பெரியார் சிவப்புச் சட்டையுடன் தோன்றும் அந்த நாடகங்கள் மிகுந்த வரவேற்புப் பெற்றவையாக அமைந்தன.

தற்போது, அதன் தொடர்ச்சியாக வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டை நினைவுகூரும் வகையில், **'வைக்கம் என்பது நாயக்கர் கதையல்ல! ஈ.வெ.ரா நாயகர் ஆன கதை'** என்ற நாடகத்தை மதுரையில் நிகழ்த்த உள்ளார்.மதுரை காமராசர் பல்கலைக்கழக மாணவ-மாணவிகள் பங்கேற்புடன், வரும் 28-ஆம் தேதி, சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு, மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் இந்த நாடகம் நிகழ்த்தப்பட உள்ளது. சமூகநீதி, சமத்துவக் கொள்கைகளைக் **'கலகக்காரர் தோழர் பெரியார் நாடகம்-3'** வழி அறிவதும், தெளிவதும் இன்னும் எளிதாகட்டும்.

## :ப்ளாஷ்பேக்



### வெள்ளி தாஜ்மஹால்!

நான் பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்து கழகத்தில் இருப்பவன். 1980 ஆம் ஆண்டு வேலூரில் நடைபெற்ற கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தந்த தலைவர் கலைஞர், பொதுச் செயலாளர் பேராசிரியர், ஆற்காட்டார், இன்றைய அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோரை மாவட்ட அவைத் தலைவர் என்ற முறையில் வரவேற்கும் வாய்ப்பு கிட்டியது. தலைவருக்கு வெள்ளியால் ஆன குட்டி தாஜ்மஹால் ஒன்றை நினைவுப் பரிசாக வழங்கினேன். அங்குத் திரண்டிருந்த கூட்டத்தைக் கண்டு தலைவரிடமிருந்து வாழ்த்தும் பெற்றேன்.



சுப்பிரமணி

**-ந.சுப்பிரமணி, மாவட்ட தேர்தல் பணிக்குழுச் செயலாளர், சாயிநாதபுரம், வேலூர்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்:90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அன்பகம் முற்றுகை!

**1976-ஆம் ஆண்டு ஆட்சிக் கலைப்புக்குப் பின், கலைஞரின் பிறந்த நாள் கொண்டாட்டங்களுக்கும் கடும் நெருக்கடி இருந்தது. ஜூன் 3-ஆம் தேதி, வீட்டுக்கு வாழ்த்து கூற வந்த தொண்டர்கள் மீது தடியடி நிகழ்த்தப்பட்டது. பின்னர் ஜூலை 3, 4 ஆகிய தேதிகளில் அன்பகத்தில் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அங்கும் பல சலசலப்புகள் உருவாக்கப்பட்டன. அதைக் காரணம் காட்டி போலீஸ் அதிகாரி தேவாரம் தலைமையில், அன்பகத்தை முற்றுகையிட்ட போலீசார், 40 க்கும் மேற்பட்ட கழகத் தோழர்களைக் கைது செய்தனர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 281




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131